Viber : 076 656 5578
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 03 வியாழக்கிழமை (19.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

## சம்பிக்க ரணவக்க பொலிஸாரால் கைது



(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கைது செய்யப் பட்டதாக சட்டமா அதிபர் திணைக் களம் தெரிவித்துள்ளது.
2016ஆம் ஆண்டு ராஜகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற 23

## நாட்டின் இறைமையையும், சட்டத்தையும் சுவிஸ் அரசு மதிக்க வேண்டும்
### சுவிஸுக்கு இலங்கை அரசு வலியுறுத்து

(கொழும்பு)
இலங்கையின் சட்டம் மற்றும் இறையாண்மையை மதிக்குமாறு சுவிஸ் அதிகாரிகளிடம் இலங்கை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.
கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்ட தாக பொய்யான முறைப்பாட்டைச் செய்தார் என்ற குற்றச்சாட்டில், சுவிஸ் தூதர பணியாளர் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்து, கவலை வெளியிட்டும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் உரிய நடைமுறைகளைப் பின் பற்றுமாறும் சுவிஸ் வெளிவிவகார திணைக்களம் அறிக்கை 23

### சிங்களவர்களை பகைக்க விரும்பவில்லை
# அரசியல் தீர்வு வழங்க வேண்டும்



### இரா.சம்பந்தன் வலியுறுத்து

*(யாழ்ப்பாணம்)*
நியாயமான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும் என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். மேலும் நாம் சிங்கள மக்களையும் சிங்கள தலைவர்களையும் பகைக்க விரும்பவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

*இடைக்கால அறிக்கை*
## ஜனாதிபதியிடம் இன்று கையளிக்கப்படவுள்ளது

(கொழும்பு)
ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள் ளும் ஜனாதிபதி ஆணைக்குழு வின் இடைக்கால அறிக்கை ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இன்று கையளிக்கப்படவுள்ளது.
ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் இந்த 23

## ட்ரம்பை பதவி நீக்க கோரி
### குற்றப்பிரேரணை

(வோஷிங்டன்)
அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை பதவி நீக்கவேண்டும் என அவருக்கு எதிராக அமெரிக்க பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் குற்றப்பிரேரணை முன் வைக்கப்பட்டு வாக்கெடுப்பு 23

## சட்டவிரோத மணல் கடத்தல்
### மாநகரசபை உறுப்பினர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ் மாநகரசபை உறுப்பி னர் ஒருவர் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.
அரியாலை பூம்புகார் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக ஜேசிபி வாகனத்தின் மூலம் சட்டவிரோத மண் கடத்தலில் ஈடுபட்ட கும்பல் குறித்து கிடைத்த தகவலையடுத்து, நேற்று அதிகாலை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வாகனங்கள் கைப் பற்றப்பட்டது.
அவை பொலிஸாரிடம்ஒப்படைக் கப்பட்டதன் அடிப்படையில், பொலி ஸார் மேற்கொண்ட விசாரணை யில் மாநகரசபை உறுப்பினர் நேற்று மாலை கைது செய்யப்பட்ட தாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3.10)

## இந்திய, சீன தூதுவர்களுடன் பிரதமர் மகிந்த சந்திப்பு

(கொழும்பு)
இலங்கைக்கான சீன தூது வருக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வுக்கும் இடையில் சந்திப்பொன்று கொழும்பில் நேற்று இடம்பெற்றுள் ளது.
இதன்போது சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகம் தொடர்பில் கலந்துரை யாடப்பட்டுள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் அடுத்த ஆண்டு ஆரம் பிக்கவுள்ள புதிய வேலைத்திட்டங் களுக்கு சீனாவின் ஆதரவு 23

## படுகாயமடைந்த முதியவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், மத்திய பேருந்து நிலைய வளாகத்துக்குள் பேருந்து மோதி முதியவர் ஒருவர் படுகாய மடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று 23

### மறவுன்புலவு காற்றாலைக்கு எதிராக
## பிரதேச மக்கள் ஒன்றிணைந்து எதிர்ப்பு போராட்டம்


23

### கடலில் மிதந்து வந்த
## 50 கிலோவுக்கும் மேற்பட்ட கஞ்சா யாழில் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மயிலிட்டி மற் றும் வல்வெட்டித்துறை இடையே யான கடற்பகுதியில் நேற்றைய தினம் பெருமளவு கேரள கஞ்சா பொதிகளை கைப்புற்றியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.
முன்னதாக மயிலிட்டி மற்றும் வல்வெட்டித்துறை கடற்பரப்புக்கிடை யில் மூன்று பொதிகள் 23

### இலங்கை பாதுகாப்புச் செயலர்
## கமால் குணரத்னவுடன் அமெரிக்க தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)
இலங்கை பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவை, அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் சந்தித்துக் கலந் துரையாடியுள்ளார். பாதுகாப்பு அமைச்சில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற் 23

*தரம் - 5 புலமைப்பரிசில்*
## பாடசாலை அனுமதி வெட்டுப்புள்ளி வெளியீடு

(யாழ்ப்பாணம்)
2019 ஒகஸ்டில் நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறு களின் அடிப்படையில் தேசிய மற்றும் பிரபல பாடசாலைகளில் தரம் 6 இல் மாணவர் களை அனுமதிப்பதற்கான வெட் 23

## ஒரு இலட்சம் தொழில்வாய்ப்புக்களை
# உருவாக்குவதற்கான திட்டம் ஜனவரி 15ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

வறுமை ஒழிப்பை நோக்கமாகக் கொண்டு ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான திட்டத்தை ஜனவரி 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான உத்தேச திட்ட கலந்துரையாடலொன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்றது.

சமுர்த்தி கொடுப்பனவை பெறுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்தும் அது கிடைககாத குடும்பங்களில் மேலதிக கல்வியைத் தொடர முடியாதுள்ள பிள்ளைகளுக்காக பலநோக்கு அபிவிருத்தி செயலணியின் கீழ் இந்த தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படவுள்ளன.

அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இருந்து தலா 300 தொடக்கம் 350 பேர் வரை இந்த செயலணிக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.


இவர்கள் பாடசாலை மற்றும் வைத்தியசாலைகள் உள்ளிட்ட ஏனைய அரச நிறுவனங்களில் அடிப்படை கல்வித் தகைமை தேவைப்படாத வெற்றிடங்களுக்கு பயிற்சிகளின் பின்னர் நியமிக்கப்படவுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படையினரின் கண்காணிப்பின் கீழ் ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## வரிச்சலுகைகளை கண்காணிக்க
# பொருளாதார நிலையத்துக்கு கோட்டாபய திடீர் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று மாலை 7.30 மணியளவில் நாரஹேன்பிட்டி விசேட பொருளாதார மத்திய நிலையத்திறகு திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.



வழங்கப்பட்டுள்ள வரிச் சலுகைகள், அத்தியாவசிய நுகர்வுப்பொருட்களின் விலைகளில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் குறித்து ஜனாதிபதி இதன்போது விசேட கவனம் செலுத்தினார்.

அங்கிருந்தவாறே நிதியமைச்சு மற்றும் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்புகொண்ட ஜனாதிபதி, வரிச் சலுகைகளின் நன்மைகள் உரிய முறையில் வியாபாரிகளுக்கும் மக்களுக்கும கிடைக்கின்றதா என்பது தொடர்பில் விழிப்பாக இருக்குமாறு அறிவுறுத்தினார். (ம-3)

## 25 மில்லியன்
# இலங்கைக்கு வழங்கும் உலக வங்கி

(கொழும்பு)

இலங்கையின் முக்கிய அரச மற்றும் பொது நிதி மேலாண்மை நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

பொதுத்துறை வினைத்திறனை வலுப்படுத்தும் திட்டம், நிதி அமைச்சின் நிறுவன ரீதியான திறனை வலுப்படுத்தி அதனுடாக வினைத்திறனை மேம்படுத்தவும் சிறந்த சேவைகளை வழங்கவும் உதவும். இந்த ஐந்தாண்டு திட்டத்தின் முக்கிய இயக்கிகளாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதிகரித்த மனித வளத்திறன்களின் பயன்பாடு அமைந்திருக்கும்.

முக்கிய பொதுத்துறை நிறுவனங்களின் நிதி மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப மானியமாக 10 மில்லியன் யூரோக்களை வழங்கி ஐரோப்பிய ஒன்றியம் திட்டத்தின் ஓர் பங்காளராக செயற்படும் என உலக வங்கி அறிவித்துள்ளது. (ம-3)

## ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும்
# அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க தலா 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு



நாடுமுழுவதும் உள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தலா 5 மில்லியன் ரூபாய் அபிவிருத்தித் திட்டங்களை ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான அறிவுறுத்தல்கள் பிரதேச செயலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித் தார்.

நேற்றுமுன்தினம் அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

"நாடுமுழுவதும் உள்ள ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தலா 5 மில்லியன் ரூபாய் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதில் முதல் கட்டமாக 2 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டிலான வேலைத் திட்டங்களை ஆரம்பிக்குமாறு பிரதேச செயலருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கிராம அலுவலர் பிரிவில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை அலுவலர் மற்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதி ஆகியோர் இந்தக் குழுவில் அடங்குவார்கள்" என்றும் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்தார். (ம-3)

சிங்களம் + ஆங்கிலம்
பேச, எழுத, வாசிக்க (இலக்கணங்களுடன்)
ஆரம்பம்
சனி - 21.12.2019 காலை 7 மணி
(ஆரியகுளம் சந்தியில் இருந்து
கிழக்குப் பக்கமாக 75 மீற்றர் D.M.I க்கு அருகில்)
பாடசாலை மாணவர் உட்பட அனைவருக்கும்.
வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும்.
ரட்ணம் மாஸ்ரர்
H/P - 070 141 7834
(1532)



பாராட்டி வாழ்த்துகின்றோம்
இம்மாதம் 10ஆம் திகதி கொழும்பில்
இலங்கைப் பத்திரிகையாளர் சங்கமும் மற்றும்
இலங்கைப் பத்திரிகை நிறுவனமும் இணைந்து
நடத்திய ஊடக விருது விழாவில்,
**வாழ்நாள் சாதனையாளர்** விருது பெற்ற
தென்மராட்சியைச் சேர்ந்த மதிப்புக்குரிய
**கோபாலபிள்ளை திருக்கேதாரநாதன்**
(முன்னைநாள் உதவி ஆசிரியர்,
தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பாளர்,
இலக்கிய சினிமா விமர்சகர்)
அவர்களை
மனதார வாழ்த்துகிறோம்.
**திரு.ஆ.சூரியகுமாரன்**
ஓய்வுநிலை கிராம அலுவலர்
தற்போது மத்தியஸ்தர் சபை (கரவெட்டி)
**திரு.சி.ஜெகஜிம்மன்**
ஆட்பதிவுத் திணைக்களம் வட மாகாணம் (வவுனியா)
(C-8588)



கண்ணீர் அஞ்சலி
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா
வித்தியாசாலையின் ஆசிரியை திருமதி
**ஜெனாஸினி ஜெயாதரன்** அவர்களின்
பாசமிகு தந்தையார்
**பரயோகலிங்கம் உதயரஞ்சன்**
தோற்றம்: 04.06.1958 மறைவு:18.12.2019
18.12.2019 அன்று இறைவனடி
சேர்ந்துவிட்டார். அன்னாரது ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரது
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தி
னருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்
**ஆசிரிய நலன்புரிக்கழகம்,
கல்விசாரா ஊழியர்கள்,
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா
வித்தியாசாலை, சுன்னாகம்.**
(1538)



விழிநீர் அஞ்சலி
எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி **பு.துரைசிங்கம்**
அவர்களின் அன்புத் தாயார்
அமரர் **செல்லன் கண்மணி**
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தி
னருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
**கல்லூரிச் சமூகம்**
**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**
(1536)

# சட்டவிரோத மணல் கொள்ளைக்கெதிராக

# யாழில் மாபெரும் கண்டனப் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

வடக்கில் இடம்பெறும் சட்டவிரோத மணல் கொள்ளைக்கெதிராக மாபெரும் கண்டனப் போராட்டமொன்று யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்றுப் புதன்கிழமை முற்பகல் இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-9-18)


SOLAR சிஸ்டம்ஸ்

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

பண்டிகைக்கால சலுகைகள்

WARRANTY 25 YEARS WARRANTY

| System | Price | Units |
|---|---|---|
| 2kW SYSTEM | 350,000/= | 240 Units |
| 3kW SYSTEM | 470,000/= | 360 Units |
| 5kW SYSTEM | 750,000/= | 600 Units |
| 8kW SYSTEM | 1,080,000/= | 950 Units |
| 12kW SYSTEM | 1,480,000/= | 1465 Units |
| 15kW SYSTEM | 1,695,000/= | 1795 Units |
| 22kW SYSTEM | 2,200,000/= | 2640 Units |
| 33kW SYSTEM | 3,300,000/= | 3960 Units |
| 44kW SYSTEM | 4,400,000/= | 5280 Units |

மின்சார தடை இல்லை No Power-Cut

- Solar + Storage
- Hybrid / Off-Grid




Off-Grid 1 இலவசம்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

7 வருடங்களுக்கான தவணை கட்டண முறை

44 kW: CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-

33 kW: CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-

22 kW: CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-

12 kW: CEB இனால் வருமானம் ரூ. 32,230 (1465 x 22/-) ரூ. 14.8 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 23,067/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 9,163/-

*நிபந்தனைகளுக்குட்பட்டது

KACO SMA Fronius SOLAX ENVERTECH victron energy REC JinKO Solar YINGLI SOLAR ReneSola

CEB SEA LECO Approved

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284
வவுனியா - 0777 763071 / 077 3963273 / 077 3963280
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

TIPS!!! (C-8587)
Factors affecting performance of a solar PV system!
A. Factors which are under the control of Human efforts:
1. Solar Panels: Figures given in the datasheet by the panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands.
B. Factors which are beyond the control of Human efforts:
1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature 3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com |Web: www.solarpowerlk.com

No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686 | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650

# இந்தியாவுடனான 2 ஆவது ஒரு நாள் போட்டியில் போராடித் தோற்றது மேற்கிந்திய தீவுகள் அணி

## . ரோகித், ராகுல் சதம் அடித்து . குல்தீப் யாதவ் ஹட்ரிக் எடுத்து அசத்தல்!

ரோகித், ராகுல் சதமடிக்க, குல்தீப் யாதவ் ஹட்ரிக் எடுத்து அசத்த வெஸ்ட் இண்டீசை 100 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஒருநாள் தொடரை சமன் செய்தது இந்தியா அணி.

இந்தியா-வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இடையிலான 2-வது ஒரு நாள் போட்டி விசாகப்பட்டினத்தில் நேற்று பகல்-இரவு மோதலாக நடைபெற்றது. இதற்கான டாஸ் சுண்டப்பட்டதில் வெஸ்ட் இண்டீஸ் அணி டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தது.

இந்திய அணியின் தொடக்க ஆட்டக் காரர்களாக ரோகித் சர்மாவும் கேஎல் ராகுலும் களமிறங்கினர். தொடக்கத்தில் இருந்தே இருவரும் ஒன்று, இரண்டு என ரன்களை எடுத்தனர். கிடைத்த பந்துகளில் சிக்சர், பவுண்டரிகளை அடிக்க தவற வில்லை. இருவரும் சிறப்பாக ஆடி சதம டித்தனர்.

முதல் விக்கெட்டுக்கு ராகுல், ரோகித் சர்மா ஜோடி 227 ரன்கள் எடுத்தது. ராகுல் 102 ரன்னில் அவுட்டானார். கேப்டன் விராட் கோலி ரன் எதுவும் எடுக்காமல் டக் அவுட் டாகி அதிர்ச்சி அளித்தார்.

ரோகித் சர்மா 138 பந்துகளில் 5 சிக்சர், 17 பவுண்டரி என 159 ரன்களை எடுத்து ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து ஷ்ரே யஸ் அய்யர் அரைச் சதமடித்தார். அவர் 53 ரன்னும், ரிஷப் பந்த் 39 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில், இந்திய அணி 5 விக்கெட் இழப்புக்கு 387 ரன்களை குவித்தது.

இதையடுத்து, 388 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் ஷாய் ஹோப் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்தார். அவர் 78 ரன்னில் அவுட்டானார். அவருக்கு அடுத்து அதிரடியாக ஆடிய நிகோலஸ் பூரன் 75 ரன்னில் வெளியேறினார். இறுதியில், கீமோ பால் போராடி 46 ரன் எடுத்து அவுட்டானார்.

ஆட்டத்தின் முடிவில் வெஸ்ட் இண்டீஸ் அணி 43.3 ஓவரில் 280 ரன்களில் ஆல் அவுட்டானது. இதனால் இந்திய அணி 107 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.




இந்தியா சார்பில் குல்தீப் யாதவ் சிறப்பாக பந்து வீசி ஹாட்ரிக் விக்கெட் எடுத்து அசத்தினார். மொகமது ஷமி 3 விக்கெட்டும், ஜடேஜா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இந்த வெற்றி மூலம் இந்திய அணி ஒருநாள் தொடரை 1-1 என சமன் செய்தது.


இரு அணிகளில் வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.




## பிளாக் ஷீப் தயாரிக்கும் வலைத்தொடரில் ஹர்பஜன்

பிளாக் ஷீப் குழுவினர் தயாரிக்கும் வலைத் தொடரில் ஐடி ஊழியர்களுக்கு திருக்குறள் சொல்லும் திருவள்ளுவராக ஹர்பஜன் சிங் நடிக்க இருக்கிறார்.

தற்போதுள்ள இணைய உலகில் இளைஞர்களின் விருப்ப யூடியூப் சேனலாக இருப்பது பிளாக் ஷீப். ஆர்.ஜே.விக்னேஷ், அரவிந்த் உட்பட பல கலைஞர்களான இளைஞர்கள் அந்தச் சேனலை முன்னெடுத்துச் செல்கிறார்கள்.



சிஎஸ்கே அணியில் சுழற்பந்து வீச்சாளராக இருக்கும் ஹர்பஜன் சிங் திருவள்ளுவராக நடிக்கும் வலைத் தொடர் ஒன்றை DUDE விக்கியின் இயக்கத்தில் தயாரிக்க உள்ளது. இந்த வலைத்தொடரின் 10 பகுதிகளை கொண்ட முதல் சீசன் வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி முதல் ஒளிபரப்பாகவுள்ளது. தற்போதுள்ள இளைய தலைமுறைகள், குறிப்பாக ஐ.டி. துறையில் வேலை பார்ப்பவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை திருக்குறள் வாயிலாக ஹர்பஜன் சிங், அவரது ஸ்டைலில் சொல்ல இருக்கிறார். இந்த வலைத் தொடருக்கு திருக்குறள் கன்சல்டன்சி சர்வீசஸ் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

## சங்கக்கார தலைமையில் எம்.சி.சி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம்

மெர்லிபோன் கிரிக்கெட் கிளப் 46 ஆண்டுகளுக்குப் பின்னர் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

குமார் சங்கக்கார தலைமையில் எம்.சி.சி. பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வது விசேட அம்சமாகும்.




எம்.சி.சி. தலைமையில் ஓர் அணி பாகிஸ்தானுக்கு இதன்போது சுற்றுப் பயணம் மேற்கொண்டு, அங்கு லாகூரில் இடம்பெறும் போட்டிகளில் பங்கேற்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2009 ஆம் ஆண்டு லாகூரில் இலங்கை கிரிக்கெட் அணி மீதான தாக்குதலின் பின்னர் பாகிஸ்தானின் கிரிக்கெட்டானது பெருமளவு வீழ்ச்சியடைந்திருந்தது.

இந் நிலையிலேயே சங்கக்கார தலைமையிலான எம்.சி.சி.யின் இந்த சுற்றுப் பயணித்தின்போது அந் நாட்டு கிரிக்கெட் மீண்டும் கட்டியெழுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உலகக்கிண்ண ரி-20 யில் டி வில்லியர்ஸ் பங்கு பெறுவார்?

### டு பிளசிஸ் நம்பிக்கை தெரிவிப்பு



2020 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண 'ருவென்டி 20' தொடரில் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஏபி டி வில்லியர்ஸ் பங்கேற்பார் என தென்னாபிரிக்க அணியின் தலைவர் டு பிளசிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதற்கான பேச்சுவார்த்தை தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சரிவை எதிர்நோக்கியுள்ள தென்னாபிரிக்க அணியில் அவர் மீண்டும் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கைகள் ஆங்காங்கே மேலெழுந்தன. இவ்வருட நடுப்பகுதியில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் இடம் பெற்ற உலகக் கிண்ணத் தொடரிலும் அவர் பங்கேற்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனாலும், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை இவ்விடயத்தில் மறுப்புத் தெரிவித்தது. ஓய்வு பெற்றவர்களை மீள அணிக்கு அழைக்கும் எண்ணம் இல்லை என குறிப்பிட்டிருந்தன.

டு பிளசிஸ் மேலும் தெரிவிக்கையில், 'மக்கள் டி வில்லியர்ஸ் மீளவும் அணிக்குத் திரும்ப வேண்டும் என்று விரும்புகிறார்கள். நானும் அதற்கு உடன்படுகின்றேன். அவரை அணிக்கு மீள அழைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் கடந்த இரண்டு , மூன்று மாதங்களாக இடம்பெறுகின்றன. 'ருவென்டி 20' போட்டிகள் வித்தியாசமானவை. டெஸ்ட் போட்டிகள் மிக முக்கியமானவை என்றாலும், 'ருவென்டி 20" உலகக் கிண்ணப் போட்டிகளும் அதற்கு சற்றும் குறைவில்லாதவை. எனவே, வில்லியர்ஸை அணிக்கு மீள அழைப்பதற்கான பேச்சுவார்த்தை தொடரும்' என்றார்.


## ஐ.பி.எல் ஏலம் இன்று கொல்கத்தாவில் ஆரம்பம்

2020 ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள வீரர்களுக்கான ஏலம் கொல்கத்தாவில் இன்று பிரமாண்டமாக இடம்பெறவுள்ளது.

13 ஆவது ஐ.பி.எல். 'ருவென்டி 20' கிரிக்கெட் தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் இடம்பெறவுள்ளது. இந்த போட்டிக்கான வீரர்களின் ஏலம் கொல்கத்தாவில் இன்று (வியாழக்கிழமை) நடைபெற உள்ளது.

ஏலப்பட்டியலில் மொத்தம் 146 வெளிநாட்டு வீரர்கள் உட்பட 332 பேர் இடம் பெற்றுள்ளனர். இதில் இருந்து 73 வீரர்கள் ஏலம் மூலம் அணிக்கு தேர்வு செய்யப்படுகிறார்கள்.

இன்று பிற்பகல் 3.30 மணிக்குத் தொடங்கும் ஐ.பி.எல். ஏல நிகழ்ச்சியை ஏலத்தை பிரபலமான இங்கிலாந்தை சேர்ந்த ஹக் எட்மீட்ஸ் நடத்துகிறார்.



### போரிஸ் ஜோன்சனின் கூற்றை எதிர்த்து

# பொதுநலவாய நாடுகளிலிருந்து இலங்கை வெளியேற வேண்டும்

## ஓமல்பே சோபிததேரர் வலியுறுத்து



(எம்பிலிப்பிட்டி)

புலம்பெயர்ந்த தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக உறுதியளித்துள்ள இங்கிலாந்தின் புதிய பிரதமர் போரிஸ் ஜோன்சனின் கூற்றை எதிர்த்து பொதுநலவாய நாடுகளிலிருந்து இலங்கை வெளியேற வேண்டும் என கலாநிதி ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்தினார்.

எம்பிலிப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தேரர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அத்துடன் போரிஸ் ஜோன்சன் இலங்கை பிரச்சினை குறித்து ஏன் இவ்வளவு தூரம் அக்கறை கொண்டுள்ளார் என்றும், அவர் இன்னும் இலங்கை ஒரு பிரிட்டிஷ் காலனித்துவ நாடு என்று நினைக்கிறாரா? எனவும் கேள்வியெழுப்பினார்.

அடுத்தது தமிழ் மக்களுடன் அவர் வைத்துள்ள உறவு பற்றியது எனக் கூறிய தேரர், இலங்கை உடனடியாக பொதுநலவாய நாடுகளிலிருந்து விலக வேண்டும்.

பொதுநலவாயம் என்பது இங்கிலாந்தைத் தவிர வேறொன்றுமில்லை, அது பிரிந்து பிளவுபடாமல் இருப்பதையே அது விரும்புகின்றதாகவும் தேரர் சுட்டிக்காட்டினார்.

மேலும் பொதுநலவாயம் என்பது காலனித்துவத்தை நிலைநிறுத்துவதற்கான தோல்வியுற்ற ஒரு முயற்சி என்றும், ஜோன்சன் இலங்கை இங்கிலாந்தின் காலனித்துவ நாடு என்று நினைத்தால் அது முற்றிலும் தவறு எனவும், எனவே இலங்கை பொதுநலவாய நாடுகள் பட்டியலிலிருந்து விரைவாக விலக வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (இ-7)


துறவற அர்ப்பணிப்பு வாழ்வின்
50 ஆவது ஆண்டு பொன் விழா
1969-2019

சகோதரி மேரி லூட்ஸ் ஜோசப்



கரம்பன், ஊர்காவற்றுறையை பிறப்பிடமாக கொண்ட சகோதரி **மேரி லூட்ஸ் ஜோசப்** அவர்களின் துறவற வாழ்வின் அர்ப்பணிப்பு ஆண்டுகள் 50 நிறைவினை அவரின் தற்போதைய அமைப்பான விசேட தேவைக்குட்பட்டோர் மகிழ்வகம் 18.12.2019ல் கொண்டாடி மகிழ்ந்தது.

இவர் தன் துறவறப் பணியோடு மாற்றீடானவர்களுக்கான கிராம மட்டத்திலான புனர்வாழ்வுத் திட்டத்தை முதல் முதலில் கிளிநொச்சி மாவட்டத்தில் வித்திட்டவர். மேலும் KAROD, MAROD, VAROD, KSNN, ASSETS, HOME OF JOY (மகிழ்வகம்) ஆகிய நிறுவனங்களை ஆரம்பித்து இன்றும் மாற்றீடானவர்களுக்கான ஊன்றுகோலாகச் செயற்பட்டு வருகின்றார்.

இவரின் பணியால் மாற்றீடானவர்களின் உள்ளங்கள் ஆற்றுப்படுத்தப்பட்டு நம்பிக்கையில் மலர்வதைக் காண்கின்றோம். அவர்களின் தாயாக, தந்தையாக, நண்பியாக, உறவினராக, வைத்தியராக, தாதியாக சேவகியாக பல்வடிவ இறைவியாக செயற்படுவதை நேரில் காண்கின்றோம்.

இறைபணிக்காக தன்னை அர்ப்பணித்தவர் இன்றும் மாற்றீடானவர்களில் இறைவனைக் கண்டு பணிசெய்வதைக் காண்கின்றோம்.அதில் அவர் மகிழ்ச்சியடைவதை அவரின் முகத்தில் காண்கின்றோம்.

இப்படிப்பட்ட தாய் வடிவம் கொண்டவர் மாற்றீடானவர்களுக்கு கிடைத்திருப்பதையிட்டு நாம் இறைவனுக்கு நன்றி தெரிவித்து வணங்கி நிற்கின்றோம். இவர் இந்நாளில் மட்டுமன்றி, வாழ்நாள் பூராகவும் நோயற்று மனக்குறையற்று மகிழ்வாக வாழவேண்டும் என்று இறைவனை வணங்கி அவரை நீடூழி வாழ வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர் : யாழ் எய்ட்

(C-8585)



Trade Finance (Investments PLC)
YAMAHA உடன்
இணைந்து வழங்கும்
நத்தார் மற்றும் புத்தாண்டுப் பரிசு மழை.

சிறப்பு விலைத் தள்ளுபடி
15,000/= முதல்
125,000/= வரை

இடம்: நல்லூர் றியோ ஐஸ்கிறீம் முன்பாக
காலம்: 20ஆம் திகதி தொடக்கம்
24 ஆம் திகதி வரை மட்டும்

Fascino Scooter
ஒன்றை கொள்வனவு செய்து



20000/=
பெறுமதியான
Oppo AIK
2 Gb Ram 32 Gb
Memory ஒன்றை
இலவசமாக பெற்றுக்
கொள்ளுங்கள்

Fz-SV.3
ஒன்றை கொள்வனவு செய்து



25,000/=
பெறுமதியான
Oppo A5S
(Finger Print)
ஒன்றை
இலவசமாக பெற்றுக்
கொள்ளுங்கள்

நிபந்தனைக்குட்பட்டது.
தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு மட்டுமே...

இச் சலுகை டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ் இடம் இருந்து மட்டுமே.
உடன் பதிவுக்கு: 077 554 5843/077 662 3824
காட்சியறை: 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-8569)



T.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

பண்டிகைக்கால
அதிரடி மலிவு விற்பனை



- பான்சி சாறிகள் ஒரு சாறி எடுத்தால் அதே சாறி இலவசம்
- பான்சி சாறி, கொட்டன் சாறிகள் 1000/=
- பெண்களுக்கான கொட்டன் சல்வார் 2000/=
- பான்சி சல்வார்கள் 40 % வரை கழிவு
- ஆடவர்களுக்கான சோட்ஸ் 500/=
- 3 கொட்டன் TOP 1000/=



டிசெம்பர் 31 ஆம் திகதி வரை மட்டுமே!

T.SANGARAPPILLAI & SONS

(C-8586)

21, Modern Market, Power House Road, Jaffna.

கிளை
பிரமாண்டமான
காட்சியறை
225C ஆஸ்பத்திரி பின்பக்கம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 5397

Email :sangarappillaiandsons@gmail.com

# கனவுகளும் பலன்களும்

## கனவில் மனிதர்கள் வந்தால்..

அரசனைக் கனவில் கண்டால் அரசாங்கத்தினால் நன்மை உண்டாகும். தனலாபம் ஏற்படும்.

ஆண்களும் பெண்களும் உள்ள கூட்டத்தைக் கனவில் கண்டால் தொழில் மேன்மை அடையும். துறவியைக் கனவில் கண்டால் பெரியவர்களின் ஆசியினால் காரிய சித்தி உண்டாகும்.

ஊமை, செவிடு ஆகியோரைக் கனவில் கண்டால் பலவிதத் துன்பங்கள் ஏற்படும். அங்கவீனமுள்ளவர்களைச் சிந்திப்பது போலக் கனவு கண்டால் ரகசியம் அம்பலமாகி அதனால் துன்பம் உண்டாகும். பைத்தியத்தைக் கனவில் கண்டால் நிதானம் தவறி சில தவறுகளைச் செய்வதால் துன்பம் வரும்.

பெற்றோரைக் கனவில் கண்டால் காரியசித்தி உண்டாகும். செல்வம் வந்து சேரும். குருவைக் கனவில் கண்டால் தொழில் அபிவிருத்தி அடையும். பதவி உயர்வு கிடைக்கும்.

பெண்கள் கணவனைக் கனவில் கண்டால் மாங்கல்ய பாக்கியம் உண்டு. வாழ்க்கையில் துன்பங்கள் நீங்கும். இறந்து போனவரிடம் பேசிக் கொண்டிருப்பது போலக் கனவு கண்டால் நோய்கள் ஏற்படும். பொருள் இழப்பு உண்டாகும்.

கனவில் கிழவியைப் பார்த்தால் தனலாபம் உண்டாகும். கர்ப்பிணிப் பெண்ணைக் கனவில் பார்த்தால் புத்திர பாக்கியம் உண்டாகும்.

இரண்டு கர்ப்பிணிப் பெண்களைக் கண்டால் இரட்டைக் குழந்தைகள் பிறக்கும்.

நமக்கு வேண்டிய யாராவது இறந்து விட்டதாகக் கனவு கண்டால் துன்பங்கள் விலகும். விரோதிகளைக் கனவில் கண்டால் கஷ்டங்கள் ஏற்படும்.

குள்ளர்களைக் கனவில் கண்டால் கைப் பொருளை இழப்பதும் பிறரால் ஏமாற்றப்படுவதும் ஏற்படும். குழந்தைகள் இறப்பது போலக் கனவு கண்டால் எதிர்காலத்தில் ஆபத்துக்கள் ஏற்படும்.

குடுகுடுப்பைக்காரனைக் கனவில் கண்டால் நல்ல செய்தி வரும். பாகவதர்களைக் கனவில் கண்டால் பொருள் வரவு ஏற்படும். பாணர்களைக் கனவில் கண்டால் தொழிலில் மேன்மை ஏற்படும். பிச்சைக்காரனைக் கனவில் கண்டால் வீட்டிற்கு விருந்தினர்கள் வருவர்.

பிச்சை அளிப்பது போலக் கனவு கண்டால் சகல சௌபாக்கியங்களும் உண்டாகும்.

பயணிகளைக் கனவில் கண்டால் பொருள் வரவு ஏற்படும். ஒரே ஓர் அந்தணரை மட்டும் கனவில் காண்பது நல்லதல்ல. இரண்டு அந்தணர்களைக் கனவில் கண்டால் சுபகாரியங்கள் நடக்கும். தலயாத்திரை செய்யலாம்.

கன்னிப் பெண் ஒருத்தி வீட்டிற்குள் வருவது போலக் கனவு கண்டால் வாழ்க்கையில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். கல்வி, கலை போன்றவை வளர்ச்சி அடையும்.

விதவையைக் கனவில் கண்டால் எடுத்த காரியத்தில் தோல்வி ஏற்படும். ஒரு சுமங்கலிப் பெண் வீட்டுக்குள் வருவது போலக் கனவு கண்டால் செல்வமும் செல்வாக்கும் பதவியும் கிடைக்கும்.

நீங்கள் மணமகனாக இருப்பதாகவோ அல்லது மாப்பிள்ளைத் தோழனாக இருப்பதாகவோ அல்லது மணமகளாக இருப்பதாகவோ கனவு கண்டால் ஏமாற்றத்தையும் துன்பத்தையும் அனுபவிக்க வேண்டியது இருக்கும்.

## சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முதலிடம்







(யாழ்ப்பாணம்)

2019ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவு மாவட்ட மட்டத்திலே அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றது.

இதற்கான கௌரவிப்பும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் நா.வேதநாயகன், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இதற்கான வெற்றிப்பரிசினை தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ,வெற்றியீட்டிய சிறுவர் கழகப் போட்டியாளர்கள் பெற்றுக்கொண்டனர். (இ-7)

## இரத்ததானம்

(குப்பிழான்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் கோண்டாவில் குட்டிசுட்டி முன்பள்ளி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (இ-18)

## அருளர் நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஈரோஸ் அமைப்பின் நிறுவுநர்களில் ஒருவராகவும், தமிழர் அரசியல் சார்பான ஆய்வு நூல்கள், நாவல்கள் போன்ற ஆக்கங்கள் பலவற்றின் ஆசிரியராகவும் விளங்கி, அண்மையில் காலமான "அருளர்" எனப்பரவலாக அறியப்படும் அருட் பிரகாசத்தின் நினைவு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லூரிலுள்ள "யூரோவில்" மண்டபத்தில் நடைபெறும். (இ-7)

## இராசி பலன்

**03.12.2019**

கார்த்திகை 17, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

சப்தமி பின்னிரவு 12.36 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 4.09 மணிவரை

சுபநேரம் 10.45-12.15 மணிவரை

இராகுகாலம் 3.15-4.45 மணிவரை

வள்ளுவன்

கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| சந் | | | |
| | | | |
| சனி, சுக், குரு, கேது | சூரி | செவ், புத | |

சந்திராஷ்டமம்

புநர்பூசம், பூசம்

**மேடம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**இடபம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பார்கள்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது. வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம்.

**சிம்மம்** இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**தனுசு** தெய்வ அனுகூலத்தால் சிறப்புகள் வந்து சேரலாம், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் இடம்பெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் வாய்ப்புண்டு.

**மகரம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கும்பம்** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்த சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, அலைச்சல்கள் சற்றுக்கூடும்.

# சட்டவிரோத மணல் அகழ்வை அரசு தடுத்து நிறுத்தாவிடின் ஆளுநர் அலுவலகத்தை முடக்குவோம்



## சிவாஜிலிங்கம் சீற்றம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மணல் அகழ்வை அரசாங்கம் தடுத்து நிறுத்தாவிடின், ஆளுநர் அலுவலகத்தை முடக்குவோம் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரித்தார். யாழ்ப்பாணத்திலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மணல் எடுத்துச் செல்வதற்கான அனும்திப் பத்திரங்கள் தேவையில்லை என அமைச்சரவையில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாரிய மண் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

கனிய வளங்களுக்கு எந்த வித பாதிப்பும் இல்லை என சுற்றுச் சூழல் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டதற்கு அமைவாக பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வந்தன.

அனுமதிப் பத்திரங்கள் கொடுக்கப்பட்ட வேளையிலும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மற்றும் மணலின் விலை அதிகரித்தும் காணப்பட்டது.

அமைச்சரவையில் அனுமதிப் பத்திரங்கள் தேவையில்லை எனக் கூறியதும் தமிழர் தாயகத்தில் பாரிய அளவில் மணல் கொள்ளைகள் இடம்பெற்று வருகின்றன. சுற்றுப்புறச் சூழலை கருத்திற் கொள்ளாது மணலை கொள்ளையடிக்கின்றார்கள்.

இதனால் பாதிக்கப்படுவது எமது மக்கள். புதிய ஒழுங்கு விதிகளுக்கு கீழ் இராணுவத்தினரை தேவையான அளவிற்கு ஈடுபடுத்துவதற்கான விசேட விதிகளை ஆக்கியுள்ளீர்கள்.

இந்நிலை யில் இராணுவமும் மணல் கொள்ளையில் ஈடுபடுகின்றதா? அல்லது துணை போகின்றதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

வடமாகாணத்தில் ஆளுநர் இல்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் இல்லை. தற்போது வடமாகாணம் கேட்பார் இன்றியும் பார்ப்பார் இன்றியும் விடப்பட்டுள்ளது. வடமாகாணத்திற்கான ஆளுநர் நியமிக்கப்படாதமையால் நாங்கள் மாற்றான் தாய் பிள்ளைகள் போன்று நடத்தப்படுகின்றோமா? என்ற கேள்வி எழுகின்றது.

சட்டத்தை ஒழுங்கு செய்ய வேண்டிய அரசாங்க அதிபர்கள் ஏன் மௌனமாக இருக்கின்றார்கள். மணல் அகழ்வுக்கு அனுமதி தேவையில்லை என யாரும் சொல்லவில்லை. வீதிகளில் எடுத்துச் செல்லப்படுகின்ற வாகன அனுமதிப் பத்திரம் தான் தேவையில்லை எனச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி விட்டு சும்மா இருக்க முடியாது. மணல் அகழ்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதியையோ பிரதமரையோ சந்தித்து நடவடிக்கை எடுக்காமல் இங்கு வந்து பார்வையிட்டு கருத்துச் சொல்வதில் பிரயோசனம் இல்லை. எனவே, ஆளுநர் நியமனத்தை தாமதிக்காது உடனடியாகச் செய்ய வேண்டும். மணல் கொள்ளைக்கு ஒரு முடிவு எடுக்க வேண்டும். பொது மக்கள் முறைப்பாடு செய்தால் வாள்வெட்டு விழுமோ என்று அச்சம் கொள்கின்றார்கள். எனவே, அரசாங்க அதிபரோ உள்ளூராட்சி தலைவர்களோ நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரச்சினைகள் உள்ளன. பொலிஸார் தெரியாது எனச் சொல்ல முடியாது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிடின் ஆளு நர் அலுவலகத்தை முடக்குவத ற்கு நிர்ப்பந்திக்கப்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-101)

# வடக்கில் சட்டவிரோத மணல் அகழ்வு உடனடியாகத் தடுக்கப்படல் வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

மணல் ஏற்றிச் செல்வதற்கான வீதி அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்யும் அமைச்சரவையின் தற்காலிக தீர்மானத்தை துஷ்பிரயோகம் செய்து மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவோரின் நடவடிக்கைகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும் என்று கடற்றொழில் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்தார்.



குறித்த அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்டமையால் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற துஷ்பிரயோக நடவடிக்கை தொடர்பாக காணி அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவிற்கு அவசர கடிதம் எழுதியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வட பகுதியில் அனுமதி அளிக்கப்படாத இடங்களில் மணல் அகழப்படுவதை உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும், மணல் அகழ்வு தொடர்பில் தென் பகுதிக்கும் வட பகுதிக்கும் இடையில் வித்தியாசங்கள் இருப்பதைச் சுட்டிக் காட்டிய அமைச்சர், வடக்கு மாகாணத்தில் பரவலாக மணல் திட்டுக்கள் காணப்படுவதால் வீதி அனுமதி இரத்தானது பல்வேறு தரப்பினரையும் அனுமதி அளிக்கப்படாத இடங்களில் எல்லாம் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவதற்கு வாய்ப்பான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு சட்ட ரீதியாக அனுமதிக்கப்படாத இடங்களில் மணல் அகழ்வில் ஈடுபடுவதால் சுற்றாடல் பாதுகாப்பிற்கு ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அறிவுறுத்தப்பட்டது.

கடந்த ஆட்சியின்போது துஷ்பிரயோகங்கள் தொடர்பாக காத்திரமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாது இருந்த தரப்புக்கள் தற்போதைய அரசாங்கம் மக்கள் நலன்சார்ந்து மேற்கொண்ட தீர்மானங்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்து வருவதற்கு அமைச்சர் தனது கண்டனத்தையும் வெளியிட்டார். (இ-7)

# குண்டுத் தாக்குதல் குறித்து மைத்திரி மற்றும் ரணிலிடம் வாக்குமூலம் பெற ஆலோசனை



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் இடம் பெறும் சி.ஐ.டி. விசாரணைகளில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொள்ளுமாறு சட்டமா அதிபர் விசாரணையாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்த விவகாரம் தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் விசாரணைக்கு வந்த போதே, பிரதி சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் மேற்படி விடயத்தை அறிவித்தார்.

இந் நிலையில் குற்றவியல் பொறுப்பு சாட்டப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் கட்டாய விடுமுறை வழங்கப்பட்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோரின் விளக்கமறியல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

## பொது இடங்களில் மிகவும் விழிப்பாக இருங்கள்

# இலங்கைக்கு வரும் பிரஜைகளுக்கு அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் தமது நாட்டவர்களை மிகுந்த எச்சரிக்கையாக இருக்குமாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரித்தது.

இலங்கை மீதான இரண்டாம் நிலை பயண ஆலோசனை (Level 2) அறிக்கையொன்றை அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டது.

அதில், அமெரிக்கத் தூதரகம் இலங்கையிலுள்ள அமெரிக்கக் குடிமக்களை பொது இடங்களில் பயணிக்கும்போது விழிப்புடன் இருக்குமாறு எச்சரித்தது.

அந்த வகையில், சுற்றுலா இடங்கள், போக்குவரத்து மையங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், ஹோட்டல்கள், கிளப்புகள், உணவகங்கள், வழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பிற பொது இடங்களில் மிகவும் விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தியது.

இந்நிலையில், இலங்கைக்கு செல்லும் அமெரிக்கர்கள் உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும் உள்ளூர் ஊடகங்களைக் கண்காணிக்கவும் மற்றும் பிற ஆலோசகர்களிடையே புதிய தகவல்களின் அடிப்படையில் திட்டங்களைச் சரிசெய்யவும் தூதரகம் அமெரிக்கக் குடிமக்களை வலியுறுத்தியது. (இ-7)

# கருணாநிதியின் வார்த்தையை நம்பி

# ஒன்றரை இலட்சம் தமிழர்கள் உயிரிழந்தனர்

## தி.மு.க. மீது அ.தி.மு.க. மீண்டும் குற்றச்சாட்டு

❖இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குமாறு பிரதமர் மோடியிடம் முதலமைச்சர் பழனிச்சாமி கோரிக்கை

❖மத்தியில் அங்கம் வகித்தபோது ஒன்றும் செய்யாத தி.மு.க. தற்போது நாடகமாடுகிறது

(சேலம்)

**முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் வார்த்தையை நம்பி சுமார் ஒன்றரை இலட்சம் இலங்கை தமிழர்கள் உயிரிழந்தனர் என தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்தார். மேலும் இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க வேண்டுமென பிரதமர் மோடியிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.**



சேலம் விமான நிலையத்தில் நேற்றுக்காலை செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், குடியுரிமை திருத்தச் சட்டத்தால் இந்தியர்களுக்கு பாதிப்பில்லை என பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் தெளிவுபடுத்தி விட்டனர்.

இதேவேளை மத்திய ஆட்சியில் தி.மு.க. அங்கம் வகித்த போது, இலங்கை தமிழர்களுக்கு ஏன் குடியுரிமை பெற்றுத்தரவில்லை எனக் கேள்வியெழுப்பிய முதலமைச்சர் பழனிச்சாமி தற்போது இலங்கைத் தமிழர்களுக்கு நன்மை செய்தது போல தி.மு.க. நாடகமாடுகின்றது எனவும் விமர்சித்தார்.

அத்தோடு தமிழக மக்கள் பெறுக்கொள்ளும் சகல வசதிகளும் முகாமில் இருக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். (இ-7)

## சுயதொழில் முயற்சிக்கு உதவி



(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேசத்தில் வருமானம் குறைந்த ஒருவருக்கு சமூக சேவைப் பகுதியினர் மூலமாக சுயதொழில் முயற்சிக்கான உதவித் திட்டம் கரவெட்டி பரிதேச செயலாளர் ஈ.தயாரூபனால் வழங்கப்பட்டது. (இ-60)

## 5 மீனவர்களுடன் சென்ற படகு மாயம்; தேடுதல் நடவடிக்கை தீவிரம்

(கொழும்பு)

5 மீனவர்களுடன் நீர்கொழும்பு மீன்பிடித் துறைமுகத்திலிருந்து தொழிலுக்கு சென்ற படகொன்று காணாமல் போயுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்தது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி கடற்றொழிலுக்கு சென்ற 'கவீஷா துவ' எனப்படும் மீன்பிடி படகொன்றே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த மீனவர்களுடனான தொடர்பு கடந்த 9 ஆம் திகதி முதல் துண்டிக்கப்பட்டதுடன் அதற்கு முன்தினம் படகில் கோளாறு ஏற்பட்டதாக தகவல் வெளியானது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுப்பதற்கான பதிவு இன்று

(குப்பிழான்)

யாழ். மாவட்டம் முழுவதும் முதன்முதலாக விவசாயிகளுக்கான விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அந்தவகையில் உடுவில் கமநலசேவைகள் நிலையத்திற்குட்பட்ட குப்பிழான், புன்னாலைக்கட்டுவன் வடக்கு- தெற்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை மத்தி, ஏழாலை கிழக்கு விவசாய சம்மேளனங்களுக்குட்பட்ட விவசாயிகளுக்கான விசேட அடையாள அட்டை பெற்றுக் கொடுப்பதற்கான விபரங்கள் பதிவு செய்யும் நடவடிக்கை இன்று வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் குப்பிழான் விவசாய சம்மேளன மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் உடுவில் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் தொடர்பான விபரங்களைப் பதிவு செய்யவுள்ளனர்.

எனவே, குறித்த விவசாய சம்மேளன நிலையங்களுக்குட்பட்ட அனைத்து விவசாயிகளையும் உரிய ஆவணங்களுடன் தவறாது கலந்து கொண்டு விவசாய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உடுவில் கமநலசேவைகள் நிலையத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-18)

## ஐயப்பன் கோவில் கொடியேற்றம்



(யாழ்ப்பாணம்)

கட்டுவன் கரண்டக்குளம் ஸ்ரீ ஐயப்பன் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை ஸ்ரீ ஹரிஹரபுத்திரரின் அவதார நட்சத்திரமான மார்கழி உத்திர நன்னாளில் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (இ-7)

## நாவலர் குருபூசையை முன்னிட்டு பேச்சு, கட்டுரைப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையால் ஆண்டுதோறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன. போட்டிக்கான பிரிவுகளும் தரங்களும் அவற்றுக்கான விடயங்களும் பின்வருமாறு,

பேச்சுப் போட்டிகள்

கீழ்ப்பிரிவு:- தரம் 6,7,8. விடயம்- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கல்விப் பணியும் தமிழ்ப் பணியும் , நேரம்- 10 நிமிடம்.

மத்திய பிரிவு:- தரம்-9,10,11. விடயம்-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கல்விப் பணியும் தமிழ்ப் பணியும், நேரம்- 7 நிமிடம்.

மேற்பிரிவு:- தரம்-12,13. விடயம்-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இன்றிருந்தால், நேரம்-10 நிமிடம்.

கட்டுரைப் போட்டி (முற்பகல் 10 மணி)

மேற்பிரிவு:- தரம் 12,13. விடயம்-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்பான தலையங்கம் ஒன்று போட்டி நாளன்று வழங்கப்படும், நேரம்-1 மணித்தியாலம்.

போட்டியில் பங்குபற்றுவோருக்கான விதிகள்:

01. குறிப்பிட்ட ஒரு பிரிவில் முன்பு பங்குபற்றி பரிசு பெற்றவர்கள் இவ்வருடம் அதே பிரிவில் கலந்து கொள்ள முடியாது.

02.நடுவர்கள் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

03. ஒரு பிரிவுக்கு ஒரு பாடசாலையில் இருந்து ஒரு மாணவர் மட்டுமே தோற்ற முடியும்.

04. வெற்றி பெற்றோருக்கு நாவலர் குருபூசை தினத்தன்று பரிசில் வழங்கப்படும்.

05.விண்ணப்பம் எமக்கு கிடைக்க வேண்டிய இறுதி நாள் 20.11.2019 புதன்கிழமை (விண்ணப்பிப்போர் தனித் தனி மாதிரிப் படிவம் தயாரித்தல் வேண்டும்) என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 17.12.2019-14.01.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## சப்தமத்தில் ஆறு கிரக சேர்க்கை



விகாரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே ராகுவும் சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. கண்டகச் சனியின் ஆதிக்கம் இருந்தாலும் குரு பார்வை இருப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. எனவே இம்மாதம் நீங்கள் எதிர்பார்த்த நற்பலன்கள் ஏராளமாக நடைபெறும்.

இல்லம் கட்டிக்குடியேறுவது முதல் கல்யாண வாய்ப்புகள் வரை கைகூடுவதற்கான காலம் கனியும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். தெளிந்த மன நிலையோடு செயற்படுவீர்கள். சனியின் பார்வையால் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றத்தான் செய்யும். அவற்றை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். படிப்படியாக முன்னேற்றங்கள் வந்து கொண்டேயிருக்கும்.

7 இல் சனி, கேது சஞ்சரிக்கும்போது, குடியிருக்கும் வீட்டால் பிரச்சினை வரத்தான் செய்யும். பணிபுரியும் இடத்தில் உயர் அதிகாரிகளிடம் கொடுத்த வாக்கை நிறைவேற்ற இயலாது. சக பணியாளர்களால் இடையூறுகளை சந்திப்பீர்கள். உங்களுக்கு இடையூறுகள் இருக்கலாம். வீட்டிலும் பிரச்சினைகள் உருவாகலாம். எதுவாக இருந்தாலும் அதை சமாளிக்கும் வகையில் குருவின் பார்வையால் தைரியமும் தன்னம்பிக்கையும் பிறக்கும். தொழில் புரிபவர்கள் 'பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டுப் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்ளலாமா?' என்று சிந்திப்பீர்கள். தங்கம், வெள்ளி வாங்கும் யோகம் உண்டு. மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும் விதத்தில் சுபவிரயங்கள் அதிகரிக்கலாம்.

. இம்மாதம் மார்கழி அஷ்டமியில் இறைவன் படியளக்கும் திருநாள் வருகிறது. அன்று சிவாலய வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. கண்டகச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் அமாவாசையன்று முன்னோர் வழிபாட்டையும் அனுமன் ஜெயந்தியன்று அனுமனையும் வழிபடுங்கள்.

**பொன்னான புதன் பெயர்ச்சி**

உங்கள் இராசிநாதனாகவும் 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன், டிசெம்பர் 21 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கிறார். ஜனவரி 7 ஆம் திகதி மகர இராசிக்கு செல்கிறார். எனவே இந்த பெயர்ச்சிகளின் விளைவாக சில மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து சேரப்போகிறது. தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கும் பொழுது குருவின் சேர்க்கையால் மங்கல ஓசை மனையில் கேட்கும். தடைகள் தானாக விலகும். மாமன், மைத்துனர் வழியில் சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். சேமிப்பு உயரும். மகர புதனின் சஞ்சார காலம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. வாழ்க்கைத் தேவைகள் ஒவ்வொன்றாகப் பூர்த்தியாகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள். கொடுக்கல்-வாங்கல்கள் சீராகும்.

**விருச்சிக செவ்வாய் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய், டிசெம்பர் 28 ஆம் திகதி 6 ஆம் இடத்திற்கு வரப்போகிறார். அங்கிருந்து 12 ஆம் இடத்தைப் பார்க்கப் போகிறார். எனவே 'விபரீத இராஜயோகம்'




அடிப்படையில் இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். உத்தியோக வாய்ப்புகளை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு அது கைகூடும். உடல்நலத்தில் மட்டும் கொஞ்சம் கவனம் தேவை.

**சுகம் தரும் சுக்கிரப் பெயர்ச்சி**

இதுவரை உங்கள் இராசிக்கு 8 இல் சஞ்சரித்து வந்த சுக்கிரன், ஜனவரி 10 ஆம் திகதி 9 ஆம் இடத்திற்கு வரப்போகிறார். கும்பத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், இன்பமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுப்பர். பொன், பொருட்கள் வாங்கும் யோகம் உண்டு. புதிய பாதை புலப்படும். சகோதரர்களின் ஆதரவோடு பூர்வீகச் சொத்து க்களின் பாகப்பிரிவினை நடைபெறும். வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ள முன்வருவீர்கள்.

**ஆறு கிரகங்களின் சேர்க்கை**

டிசெம்பர் 25, 26, 27 ஆகிய திகதிகளில் ஏற்படும் ஆறு கிரக சேர்க்கை (சூரியன், சந்திரன், புதன், வியாழன், சனி, கேது) 7 ஆம் இடத்தில் நிகழ இருக்கிறது. அங்கிருந்து 6 கிரகங்களும் உங்கள் இராசியைப் பார்க்கின்றன. இதன் காரணமாக சகோதர ஒத்துழைப்புகள் குறையலாம்.

விவாகப் பேச்சுக்கள் விலகிச் செல்லலாம். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் திடீரென மாற்றப்படலாம். அந்த மூன்று நாட்களிலும் புது முயற்சிகளை தவிர்க்கவும். பயணங்களை மாற்றியமைக்கலாம். பிறரைப் பற்றி விமர்சிக்க வேண்டாம். கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை. விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டிய நேரம் இது. இக்காலத்தில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்கள் செய்வது அற்புத பலன் தரும். இம்மாதம் நவக்கிரக வழிபாடும், சனிக்கிழமை விரதமும் நன்மையைக் கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் ஜென்ம இராகுவின் ஆதிக்கத்தால், பயணங்கள் அதிகரிக்கும். பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். இருப்பினும் வந்த பணம் உடனடியாக செலவழிந்து விடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. ஆறு கிரக சேர்க்கை ஏழாம் இடத்தில் இருப்பதால், அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம். சகோதரர்களுடன் பிரச்சினைகள் உருவாகி மறையும். தாயின் அன்பும் ஆதரவும் திருப்தி தரும். பிள்ளை களால் சிறு சிறு விரயங்கள் உண்டு. ஆரோக்கியத்தில் மட்டும் அதிக அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். பணி புரியும் பெண்களுக்கு சக பணியாளர்களால் தொல்லை வரலாம். திறமைக்கேற்ற பலன் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். அனுமன் வழிபாடும், குருபகவான் வழிபாடும் ஆனந்தமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கும்.

## பொறுப்பு சொல்வதால் பிரச்சினை உருவாகும்



விகாரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சுக ஸ்தானத்தில் செவ்வாய் வீற்றிருக்க, விரய ஸ்தானத்தில் இராகு பலம் பெற்றிருக்கிறார். 6 ஆம் இடத்தில் சூரியன், வியாழன், சனி, கேது ஆகிய 4 கிரகங்களும் இணைந்திருக்கின்றன. பொதுவாக எதிர்ப்பு, வியாதி, கடன் என்பதைக் குறிக்கும் 6 ஆம் இடத்தில் சனி, சூரிய சேர்க்கை இருப்பது அவ்வளவு நல்லதல்ல. எனவே எதிரிகள் பலம் கொஞ்சம் மேலோங்குகின்ற நேரம் இது. தனக்குத் தானே எதிரியாகும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு அமையும்.

6 ஆல் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 2, 12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். ஆனாலும் எதையும் ஒரு முறைக்கு இரு முறை செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகக்கூடும். செவ்வாயின் பார்வை களத்திர ஸ்தானத்தில் பதிவதால், திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். பொதுவாக ஆறாமிடம் பலம்பெற்றிருக்கும் நேரத்தில, சுப விரயங்களையே அதிகமாக மேற்கொள்வது உகந்தது. வீடு, இடம் வாங்குவது, கட்டிய வீட்டைப் பழுதுபார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தலாம்.

இம்மாதம் வரும் 'இறைவன் படியளக்கும் திருநாள்' அன்று, சிவாலய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அனுமன் ஜெயந்தியன்று அனுமனுக்கு வெற்றிலை மாலை சூட்டி வழிபட்டால் காரியத் தடைகள் அகலும்.

**பொன்னான புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 21 ஆம் திகதி தனுசு இராசிக்கு செல்கிறார். 12 இற்கு அதிபதி 6 இல் அமரும்போது, 'விபரீத இராஜயோகம்' செயற்படும். இந்தக் காலகட்டத்தில் திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் பண வரவும் கிடைக்கலாம். பகையான நண்பர்கள் உறவாக மாறுவர். ஜனவரி 7 ஆம் திகதி மகர இராசிக்கு புதன் செல்கிறார். இக்காலத்தில் உறவினர் பகை அகலும். உடன் பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். வழக்குகள் சாதகமாகும். உடன் பிறப்புகளுக்கு திருமணம் முடிவாகும். ஒரு சிலருக்கு வெளிநாட்டு அழைப்புகள் வரலாம்.

**விருச்சிக செவ்வாய் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாய். அவர் டிசெம்பர் 28 ஆம் திகதி விருச்சிக இராசியில் தனது சொந்த வீட்டில் அடியெடுத்து வைக்கிறார். இக்காலம் ஒரு இனிய காலமாக அமையும். மதிப்பும் மரியாதையும் உயரும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து படைத்தவர்களுடன் உங்களுக்கு நட்பு உண்டாகும். அவர்கள் மூலமாக நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும்.

**சுகம் தரும் சுக்கிரப் பெயர்ச்சி**

ஜனவரி 10 ஆம் திகதி கும்ப இராசிக்கு, சுக்கிரன் செல்கிறார். இதன் விளைவாக அடகு வைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பு கிட்டும். பெண் வழி பிரச்சினைகள் அகலும். குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வாகனம் மாற்றம் செய்ய உகந்த




நேரம் இது. பயணங்கள் பலன் தருவதாக அமையும். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் உண்டு.

**ஆறு கிரகங்களின் சேர்க்கை**

டிசெம்பர் 25, 26, 27 ஆகிய மூன்று திகதிகளில் தனுசு இராசியில், ஆறு கிரக சேர்க்கை (சூரியன், சந்திரன், புதன், வியாழன், சனி, கேது) ஏற்படுகிறது. இந்த காலகட்டத்தில் எந்த ஒரு காரியத்தையும் பிறரிடம் ஒப்படைத்தால் சிறப்பாக நடைபெறுமா? என்பது சந்தேகம்தான்.

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது போகலாம். கொள்கைப் பிடிப்பை தளர்த்திக் கொள்ள நேரிடும். உடன் இருப்பவர்களை நம்பிச்செயற்பட முடியாது. ஆறு கிரக சேர்க்கை காலத்தில் எதிரிகள் பலம் அதிகரிக்கும். சண்டை, சச்சரவுகள் வீடு தேடி வரலாம். உடல் ஆரோக்கியத்தில் தொந்தரவுகள் உண்டாகலாம். கவனமுடன் செயற்பட வேண்டிய நேரம் இது.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருவை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் எதிர்பாராத சில மாற்றங்கள் நடைபெறலாம். அருகில் இருப்பவர்களை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். என்றாலும் குடும்ப விடயங்களுக்குள் மூன்றாம் நபரை நுழைய விட்டால் பிரச்சினைகள் உருவாகத்தான் செய்யும். மாதத்தின் பிற்பகுதியில் தாய்வழி ஆதரவும், சகோதர வழி ஒத்துழைப்பும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. டிசெம்பர் 28 ஆம் திகதி முதல் ஜனவரி 7 ஆம் திகதிக்குள் நல்ல காரியம் ஒன்று இல்லத்தில் நடைபெறும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். நீங்கள் எவ்வளவு திறமையாகச் செயற்பட்டாலும் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற முடியாது.

ஆறு கிரக சேர்க்கை காலத்தில் நிதானத்தோடு செயற்படுவது நல்லது. சனிக்கிழமை தோறும் பெருமாள், லட்சுமி வழிபாடு செய்தால் பெருமை சேரும்.

(தொடரும்)

# இயற்கை வளங்களை மக்கள் உரிய முறையில் பயன்படுத்த அரச கூட்டுத்தாபனமொன்றை உருவாக்க வேண்டும்

## வடக்கு மாகாணசபை முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம்



(நெளுக்குளம்)

அரச கூட்டுத்தாபனமொன்றை உருவாக்குவதனூடாக உரியமுறையில் இயற்கை வளங்களை மக்கள் பயனுற வழியேற்படுத்தலாம் என வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் மணல் மற்றும் கனியவளங்கள் அகழ்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வாக எதனை பரிந்துரைக்கலாம் எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்.

மணல் கொள்ளையும் அதனோடு தொடர்புபட்ட போராட்டங்களையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பரவலாக காணக்கூடியதாக உள்ளது. யுத்தத்தின் பாதிப்பில் இருந்து மீளமுடியாமல் தவிக்கின்ற மக்கள் தொடர்ச்சியாக தங்களது வளங்களை பாதுகாப்பதற்கும் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இன்னும் பல அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் போராட வேண்டியுள்ளது.

இவ்வாறான போராட்டங்கள் தவிர்க்கப்பட முடியாதவை என்பதுடன் மறுபுறம் அம்மக்களுடைய நாளாந்தக் கடமைகளை செய்யமுடியாமல் தடுக்கிறது என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

மீண்டும் மீண்டும் சாதாரண நிர்வாக நடைமுறைகளினூடாக தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் மக்கள் வீதியில் இறங்கிப்போராட வேண்டியிருப்பது துரதிர்ஷ்டவசமானது. சொந்த , பொது தேவைகளை நிறைவு செய்யக்கூட மணல், கிரவல் மற்றும் கருங்கல் பெறமுடியாமல் இருக்கிறது என பல சந்தர்ப்பங்களில் மக்கள் முறையிட்டதை அவதானிக்க முடிந்தது. ஆனால் இப்போது மணல் கொள்ளைக்கு எதிராக அதேமக்கள் வீதியில் போராடுகிறார்கள்.

எனவே அரசாங்கம் அரச கூட்டுத்தாபனம் ஒன்றை அமைத்து மணல் மற்றும் ஏனைய கனியவளங்களை தனிப்பட்டவர்கள் கொள்ளையிடுவதைத் தடுத்து குறைந்த விலையில் இலகுவில் மக்களிற்கு கிடைக்கக்கூடியவகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதனூடாக கனிய வளங்களை உரியமுறையில் பாதுகாப்பாக பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவதோடு இவ் வளங்களை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் பாரிய தொகை பணத்தை செலவு செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

கடந்தகாலங்களில் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத்திட்ட பயனாளிகள் பலர் மணல் மற்றும் ஏனைய கனியவளங்களை பெற்றுக்கொள்ள கணிசமான தொகைப்பணத்தை செலவு செய்ததனால் கடனாளியாக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

அத்தோடு அரச நிதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிரவல் வீதியிடும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் ஒதுக்கப்பட்ட நிதி உரியமுறையில் பயன்படுத்தப்படாமலும் உரிய தரம் பேணப்படாமல் வீதிகள் அமைக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. எனவே அரச கூட்டுத்தாபனமொன்றை உருவாக்குவதனூடாக உரியமுறையில் இயற்கை வளங்களை மக்கள் பயனுற வழியேற்படுத்துவதோடு பல இளையவர்களிற்கும் வாகன உரிமையாளர்களிற்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தமுடியும்.

எனவே ஜனாதிபதி துறைசார் அமைச்சரும் காலம் தாழ்த்தாது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-299)

## 12 ஜோதிலிங்க தரிசனம்

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பாரதத்தின் மகிமை வாய்ந்த பன்னிரு ஜோதிலிங்க தரிசன நிகழ்வு நாளை 20 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேலதிக விபரங்களை 021 228 3372, 077 452 2637 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரம்மகுமாரிகள் இராஜயோகா நிலையத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (9)




## புலம்பெயர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் விசேட வழிபாடு

(நெளுக்குளம்)

சர்வதேச புலம்பெயர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் உறவுகளுக்கான விஷேட பூசையும் நெய்தீபம் ஏற்றி வழிபடும் நிகழ்வும் நேற்று காலை குட்செட் வீதி ஸ்ரீகருமாரி நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் தமிழ் விருட்சம் அமைப்பினர் மற்றும் ஆலய பரிபாலன சபை ஏற்பாட்டில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நா.பிரபாகர குருக்கள் தலைமையில் இடம் பெற்றது.



இதன்போது புலம்பெயர்ந்து வாழ்ந்து மறைந்த உறவுகளுக்கும்.ஆபத்தான கடற்பயணங்களில் மரணித்த உறவுகளுக்கும்.புலம்பெயரும் போது பல்வேறு சந்தர்ப்பங்களில் மரணித்த உறவுகளுக்கும் இன்னும் அகதி வாழ்க்கை வாழும் உறவுகள் வாழ்வில் விடிவு கிடைக்க வேண்டியும் ஆத்மா சாந்தி பிரார்த்தனையும் விசேட பூசை வழிபாடும் இடம் பெற்றதுடன் அவர்கள் நினைவாக நெய் தீபம் ஏற்றி வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் , நகரசபை உறுப்பினர் சுமந்திரன், ஆலய பரிபாலன சபையினர், சமூக ஆர்வலர்கள், நலன் விரும்பிகள், பக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9-299)

## கரைச்சிப் பிரதேச கலாசார பெருவிழா

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச கலாசாரப் பெருவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபை செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய த.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் (காணி) ந.திருலிங்கநாதன், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சிஜீவா சிவதாஸ், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைவர் சி.முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

## நந்திக்கடல் துப்புரவுப் பணி 2020 இல் ஆரம்பம்
## அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு நந்திக்கடலை துப்புரவு செய்யும் பணிகள் அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் முன்னெடுக்கப்படும் என மாவட்ட அபிவிருத்திக் குழுவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீனவர்களின் வாழ்வாதாரமாக அமைந்துள்ள நந்திக்கடல், நாயாறு ஆகிய பகுதிகளில் கடந்த காலங்களில் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தம் மற்றும் வெள்ளப்பாதிப்புக்கள் காரணமாக கழிவுகள் மற்றும் மண் என்பன தேங்கி ஆழம் குறைந்து காணப்படுவதனால் வாழ்வாதாரத் தொழில்களில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக மீனவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் நந்திக்கடல் பகுதியானது உடனடியாக ஆழப்படுத்தி துப்புரவு செய்ய வேண்டியிருப்பதாக மீனவர்களால் தொடர்ச்சியாகவே கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதாவது நந்திக்கடல் துப்புரவு செய்வது தொடர்பான கோரிக்கையினை மீனவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர்.

அதன் அடிப்படையில் இதனைத் துப்புரவு செய்வதற்கு 2018 ஆம் ஆண்டில் நிதி கிடைக்கப் பெற்ற போதும் அதனைத் துப்புரவு செய்வதற்கு வனஜீவராசிகள் திணைக்களத்தின் அனுமதி கிடைக்காததனால் அந்த நிதி செலவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கான அனுதிகளைப்பெற்று துப்புரவு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் தொடர்ந்தும் உரிய தரப்புக்களுக்கு அறிவித்திருக்கின்றோம் என மாவட்ட அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நந்திக்கடல், நாயாறு ஆகிய இரண்டு கடற்பகுதிகளும் 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி இயற்கை ஒதுக்கிடங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு இடங்களும் மீன்பிடி மக்களுக்கும் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும் பங்கிருக்க வேண்டும் என வர்த்தமானி திருத்தப்பட வேண்டுமெனவும் கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரால் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

நந்திக்கடலை துப்புரவு செய்வதற்கு அனைத்துத் தரப்பினரும் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக கூட்டத்தில் தெரிவித்திருந்ததுடன் அடுத்த ஆண்டின் நடுப்பகுதி வரை ஆற்றில் நீர் காணப்படுவதால் அதனைத் துப்புரவு செய்ய முடியாது என்றும் ஜூன் மாதமளவில் அதற்கான நிதியைப் பெற்று புனரமைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

## பிளாஸ்டிக் போத்தல்கள் சேகரிப்பு நிலையம் வவுனியாவில் திறப்பு



வவுனியா நகரசபையினால் "மீண்டும் வாழ்வளிப்போம்" வெற்றுப் பிளாஸ்ரிக் போத்தல்கள் சேக ரிக்கும் நிலையம் திறந்து வைக் கப்பட்டு பாடசாலை மாணவர் களை ஊக்குவிக்கும் நடவடிக் கையாக மாணவர்களுக்கு அறி முக அட்டைகளும் வழங்கி வைக் கும் நிகழ்வு நேற்று முன்தினம் நகரசபை பொது பூங்காவிற்கு அருகில் நகரசபை தலைவர் இ.கௌதமன் தலைமையில் இடம்பெற்றது.

ஆசிய பவுண்டேசன், கொக்க கோலா பவுண்டேசன், சுற்றுச் சூழல் அதிகார சபையுடன் இணைந்து வவுனியா நகர சபைக் குட்பட்ட பகுதியில் ஒரு மில்லியன் ரூபா நிதியுதவியில் பிளாஸ்டிக் போத்தல்கள் சேகரிக்கும் மீள் சுழற்சி செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் நகர பொதுபூங்காவிற்கு அருகில் மீள் சுழற்சி செய்யும் நிலையம் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப் பட்டது. அத்துடன் மாணவர்களுக்கு புள்ளி அடிப்படையில் பிளாஸ்டிக் சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பித்து வைக் கப்பட்ட கற்றல் உபகரணங்கள் வழங்க அவர்களுக்கான அறிமுக அட்டைகளும் வழங்கி வைக்கப் பட்டுள்ளன. (9-299)

# யாழ். பல்கலை. விவசாய பீடத்தில் உலர்வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு இன்று

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாய பீடத்தின் நான்காவது உலர்வலய விவசாயத்திற்கான சர்வதேச ஆராய்ச்சி மாநாடு இன்றும் நாளையும் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாய பீட அரங்கத்தில் "பசுமை மற்றும் நீல உணவுப் பாதுகாப்பை நோக்கி" **(Towards Green and Blue Food Security)** என்ற முதன்மைத் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

இவ்வாராய்ச்சி மாநாட்டின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைகழக தகுதி வாய்ந்த அதிகாரி வாழ் நாள் பேராசிரியஉ க. கந்தசாமி, கௌரவ விருந்தினராக கலாநிதி திரஞ்சனி கெட்டியாராச்சி (விலங்குஉற்பத்திமற்றும் சுகாதாரதிணைக்களம்) கலந்து கொள்வதுடன் "ஏற்றுமதிச் சந்தையை நோக்கிய கோழி வளர்ப்பின் வளர்ச்சி" எனும் தொனிப்பொருளில் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இம் மாநாட்டின் முதன்மைப் பேச்சாளராக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கே.ரி.பார்த்திபன் "இந்தியாவில் தொழில்துறை விவசாய காடுவளர்ப்பின் மதிப்பீட்டுச் சங்கிலி" எனும் தலைப்பில் முதன்மை பேருரையாற்றவுள்ளார்.

மேலும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களான மு. கார்த்திகேயன் மற்றும் வே. அம்பேத்கார், இலங்கை வயம்பபல்கலைக் கழகத்தின் விவசாயபீடத்தின் பீடாதிபதியும் சிரேஸ்ட பேராசிரியர் உதித் கே. ஜயசிங்க முதலிகே, பேராதனைப் பல்கலைக்கழக சிரேஸ்ட பேராசிரியர் கே.டீ.டபிள்யூ. நந்தலால் ஆகியோர் பேருரைகளை ஆற்றவுள்ளனர்.

மேலும் இவ்வாராய்ச்சி மாநாட்டில் இலங்கை மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால் பயிராக்கவியல், விவசாய உயிரியல், விலங்கு விஞ்ஞானம், மண், சூழல் மற்றும் பொறியியல் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், நீர், பொருளாதாரம் மற்றும் அறிவூட்டல் ஆகிய உபதொனிப் பொருள்களில் 74 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

மேலும் கடந்த வருடங்களில் நடைபெற்ற மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் முழுமையான விபரணத்தைக் கொண்டதாக விவசாய பீடத்தின் ஆண்டுச் சஞ்சிகை "உலர் வலயவிவசாயம்" இன் 5 ஆம் இதழும் இம்மாநாட்டில் வெளியிடப்படவுள்ளது. (9)

# 45 கோடி செலவில் வவுனியாவில் வணிகவளாகம்



(நெளுக்குளம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 700 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் வவுனியாவில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்பாடுகள் தொடர்பாக வவுனியா நகர சபையில் கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கட்கிழமை தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் இடம் பெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் குறித்த திட்டத்தின் கீழ் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள காணியில் 450 மில்லியன் ரூபாய் பெறுமதியான நவீன வணிக வளாக தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளதுடன், வவுனியா பொதுப் பூங்கா வளாகத்தில் 100 மில்லியன் ரூபாய் செலவில் திறந்த அரங்கம் ஒன்றும் அதனுடன் இணைந்த வகையில் அறைகளும், பொது மக்கள் இருப்பதற்கான வசதிகளும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் வவுனியா பொது நூலகத்திற்கு அண்மையில் 150 மில்லியன் ரூபாய் செலவில் திருவள்ளுவர் அருங்காட்சியகம் ஒன்றும் அதனுடன் இணைந்த வகையில் கலாசார மண்டபம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

குறித்த வேலைத்திட்டங்களை விரைவில் ஆரம்பிப்பதற்கான அனைத்துப் பணிகளும் நகரசபையினால் முன்னெடுக்கபட்டு வருகிறது. (9-299)




# வன்னி புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

(நெளுக்குளம்)

வன்னி மாவட்டத்திற்கு புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக மாலம்போ மேல் மாகாணத்தை சேர்ந்த பொலிஸ் சேவையில் 37வருடம்சேவை புரிந்த றொகான்ஜே.சில்வா நேற்று முன்தினம் வன்னி மாவட்டத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்று கொண்டார்.

கடந்த 1982ஆம்ஆண்டுபொலிஸ் சேவையில் உப பொலிஸ் பரிசோதகராக இணைந்து கொண்ட றொகான் ஜே.சில்வா வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றுவதற்கு முன்னர் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றி வந்துள்ளார்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய அனுரா அபேயவிக்கிரம கடந்த ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இந்நிலையில் இடை வெளியாக காணப்பட்ட பதவிக்கு புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (9-299)



**போரினால் பாதிக்கப்பட்ட தாயக உறவுகளுக்கான கல்வி மற்றும் மறு வாழ்வுக்கான மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் ஒரு கட்டமாக பரந்தன் 3ஆம் வாய்க்கால் பகுதியில் வசிக்கும் கணவரை இழந்த குடும்பத்தை தலைமை தாங்கும் இரண்டு பெண்களுக்கு த லா இருபது ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. இப் பொருட்களை 3ஆம் வாய்க்கால் கிராம விஸ்தரிப்பின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் மகேந்திரன் வழங்கி வைத்தார்.**

**(படம்:முரசுமோட்டை செய்தியாளர்)**

# வவுனியா நகர்ப்பகுதிகளில் காணாமல்போன மலசலகூடங்களை கண்டுபிடிக்கக் கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா நகர் பகுதியில் காணாமல் போன மலசலகூடங்கள் தொடர்பாக ஆராயுமாறு வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று முன்தினம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் அபிவிருத்திக்குழுத் தலைவர் தர்மபால தலைமையில் இடம் பெற்றது.

அதில் வவுனியா நகரில் காணப்பட்ட பொது மலசலகூடங்கள் காணாமல் போயுள்ளதாக அபிவிருத்திக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

தற்போது நகருக்கு வருகை தரும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் மலசலகூடங்களின் தேவை அதிகரித்துள்ளதாகவும் குறித்த மலசலகூடங்கள் காணாமல் போனமையால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக றோயல்காடின் பகுதி, முதலாம் குறுக்குத்தெரு, குருமன்காடு சந்தி, சிறிமுருகன் தியேட்டர் சந்தி ஆகிய பகுதிகளில் பொது மலசல கூடங்கள் முன்னர் இருந்ததாகவும் அது தற்போது களவாடப்பட்டுள்ளதாகவும் வவுனியா தர்மலிங்கம் சேவிஸ் ஸ்டேசனுக்கு முன்பாக இருந்த மலசலகூடத்தை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே மக்களின் நலன் கருதி குறித்த மலசலகூடங்களை உரிய அதிகாரிகள் கண்டுபிடிக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக நகரசபை தலைவருக்கு தெரியப்படுத்தி அந்த விடயங்கள் தொடர்பாக ஆராயுமாறு அரச அதிபரால் தெரிவிக்கப்பட்டது. (9-299)

# வறுமையை போக்காமல் எந்தவொரு இலக்கையும் அடைய முடியாது - அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

(கண்டாவளை)

வறுமையைப்போக்காது எந்தவொரு இலக்கையும் எட்டமுடியாது என பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் கிராம சக்தி வேலைத்திட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதாரக் கடன் மற்றும் நன்கொடை நிதி வழங்கும் நிகழ்வும் பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் வாழ்வாதார



உதவி வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் கண்டாவளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிராமத்துப்பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டும் எமது மாவட்டம் வறுமையில் முதலிடத்தில் உள்ளது. அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களே முதல் இடங்களில் இருக்கின்றன. வறுமையைப் போக்காது எந்த இலக்கையும் எட்டமுடியாது.

பொருளாதார முன்னேற்றம் என்பது மிக முக்கியமானது. தனிவருமானத்தை 'அதிகரிப்பதுடன், கிராமத்துப் பொருளாதாரத்தையும் வளர்க்கவேண்டும். அதனூடாக எமது பிரதேசத்தை மீளவும் கட்டியெழுப்பவேண்டும் என மேலும் தெரிவித்தார்.


இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 72 பயனாளிகளுக்கு தலா 20000 ரூபா கடனாகவும் 21 பயனாளிகளுக்கு தலா 10000 மானியமாகவும் கிராம சக்தி திட்டத்தின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட திட்ட்ங்களுக்காக 385000 ரூபா பெறுமதியான பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. (9-312-315)

# வலம்புரியின் 20 ஆவது ஆண்டு நிறைவிழா 20.12.2

## வலம்புரி விருது வழங்கிக் கௌரவிக்கப்படும் சான்றாண்மைப் பெரும

## எழுத்தாளர் பெருமக்களுக்கான வலம்புரி விருது



வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
**சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்கள் (நீர்வைமணி)**
அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.




வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
**பேராசிரியர் கு.மிகுந்தன்**
(பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.



வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது
**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.



வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
**கலாநிதி க.தவலிங்கம்**
(தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு, ஓய்வு நிலை நில அளவையியலாளர் நாயகம்) அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.




வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
**திரு.செ.மதுசூதனன்**
(ஓய்வுநிலை பிரதம எழுதுவினைஞர்)
அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.




வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
**திரு.மரியநாயகம் பிரான்சிஸ்க்**
(ஊடகவியலாளர்) அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு-A இற்கு**
வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.



வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
**திரு.மு.வாமதேவன்**
(செய்தி ஆசிரியர் வலம்புரி)
அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.



வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
**வைத்திய நிபுணர் சி.சிவன்சுதன்**
(பொது வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)
அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.



வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
கலாபூஷணம்
**திரு.கே.வி.குணசேகரம்**
(ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

வலம்புரி நாளிதழுடன் ஒன்றிணைந்து அறிவார்ந்த ஆக்கங்களை வாரி வழங்கும் எழுத்தாளர்களுக்கான வலம்புரி விருது.
**திரு.ஐயம்பிள்ளை பொன்னம்பலம்**
(ஓய்வுநிலை விரிவுரையாளர்)
அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது.

## வர்த்தகப் பெருமக்களுக்கான வலம்புரி விருது




வலம்புரியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய வர்த்தகப் பெருமக்களுக்கான வலம்புரி விருது
**திரு.சிதம்பரப்பிள்ளை நேசேந்திரன்**
(தொழிலதிபர், Be.Es.EN ரெடேர்ஸ், கொழும்பு) அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்படுகிறது.



வலம்புரியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய வர்த்தகப் பெருமக்களுக்கான வலம்புரி விருது
**திரு.முத்துசாமி கந்தவேள்**
(தொழிலதிபர், பெட்டா எசன்ஸ் சப்ளேயர், யாழ்ப்பாணம்) அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்படுகிறது.


## உற்ற நேரத்தில் உத
## பெருமக்களுக்கான வலம்



வலம்புரியின் உருவாக்
கொடுத்து உதவிய பெ
வலம்புரி
**திரு.சிறிராஜபு**
(உரிமையாளர், சரவ
யாழ்ப்பாணம்) அவர்க
கௌரவிக்கப்ப



வலம்புரியின் உருவாக்
கொடுத்து உதவிய பெ
வலம்புரி வி
**திருமதி குண**
**யோகசர்**
அவர்களுக்கு
கௌரவிக்கப்ப




வலம்புரியின் உருவா
கொடுத்து உதவிய பெ
வலம்புரி
**திரு.ஆறுமுகம்**
(தொழிலதிபர்,
என்ரபிறைசஸ்) அவர்
கௌரவிக்கப்




வலம்புரியின் உருவாக்
கொடுத்து உதவிய பெ
வலம்புரி
**கலாபூஷ**
**திரு.க.கதிர**
(ஓய்வுநிலை ஆசிரியர்
அவர்களுக்கு
கௌரவிக்கப்ப



வலம்புரியின் வளர்
பங்காற்றிய வர்த்தகப் பெ
வலம்புரி
**திரு.யோ.செ.அவ**
(தொழிலதிபர், ஆசீர் வ
யாழ்ப்பாண
அவர்களுக்கு
கௌரவிக்கப்ப



வலம்புரியின் வளர்
பங்காற்றிய வர்த்தகப் பெ
வலம்புரி
**திரு.சிதம்பரப்**
**கந்தசா**
(தொழிலதிபர், ARK Pr
Jaffna
அவர்களுக்கு
கௌரவிக்கப்ப



வலம்புரியின் வளர்
பங்காற்றிய வர்த்தகப் பெ
வலம்புரி
**திரு.பரராஜசிங்**
(தொழிலதிபர்) அவர்க
கௌரவிக்கப்ப

# 12.2019

## பெருமக்கள்

## ல் உதவிய
## வலம்புரி விருது

யின் உருவாக்கத்திற்கு தோள்
உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**சிறிராஜபுலேந்திரன்**
மயாளர், சரவணா அச்சகம்,
ணம்) அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.

யின் உருவாக்கத்திற்கு தோள்
உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**ருமதி குணலட்சுமி**
**யோகசர்மா**
அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.

யின் உருவாக்கத்திற்கு தோள்
உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**ஆறுமுகம் குணரட்ணம்**
தொழிலதிபர், ஸ்ரீரங்கன்
றைசஸ்) அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.

யின் உருவாக்கத்திற்கு தோள்
உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**கலாபூஷணம்**
**திரு.க.கதிரவேலு**
நிலை ஆசிரியர், உரும்பிராய்)
அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.

புரியின் வளர்ச்சிக்கு பெரும்
வர்த்தகப் பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**ா.செ.அலெக்ஸ் நின்சன்**
திபர், ஆசீர் வணிக நிலையம்,
யாழ்ப்பாணம்)
அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.

புரியின் வளர்ச்சிக்கு பெரும்
ய வர்த்தகப் பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**ந.சிதம்பரப்பிள்ளை**
**கந்தசாமி**
திபர், ARK Printing Solution,
Jaffna)
அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.

புரியின் வளர்ச்சிக்கு பெரும்
ய வர்த்தகப் பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**பரராஜசிங்கம் ஸ்ரீகரன்**
லதிபர்) அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.


# வலம்புரி விருது



வலம்புரியின் உருவாக்கத்திற்கு தோள்
கொடுத்து உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**திருமதி பவானி சற்குணராஜா**
(சிரேஷ்ட சட்டத்தரணி, யாழ்ப்பாணம்)
அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.




வலம்புரியின் உருவாக்கத்திற்கு தோள்
கொடுத்து உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
அருட்திரு
**ரூபன்மரியாம்பிள்ளை**
(இயக்குநர், பிசப் சவுந்தரநாயகம் மீடியா
சென்ரர், யாழ்ப்பாணம்) அவர்களுக்கு
வழங்கி கௌரவிக்கப்படுகிறது.




வலம்புரியின் உருவாக்கத்திற்கு தோள்
கொடுத்து உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**திரு.சு.வேலாயுதபிள்ளை**
(கணக்காளர் - வலம்புரி) அவர்களுக்கு
வழங்கி கௌரவிக்கப்படுகிறது.




வலம்புரியின் உருவாக்கத்திற்கு தோள்
கொடுத்து உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**திரு.க.லோகநாதன்**
(சிரேஷ்ட ஒப்புநோக்குநர், வலம்புரி)
அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.



வலம்புரியின் உருவாக்கத்திற்கு தோள்
கொடுத்து உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
கலாபூஷணம்
**திரு.சு.துரைசிங்கம்**
(ஓய்வுநிலை அதிபர்,வலம்புரி ஆசிரியர்)
அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.



வலம்புரியின் உருவாக்கத்திற்கு தோள்
கொடுத்து உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**திரு.நா.சண்முகானந்தன்**
(ஓய்வுநிலை படவரைஞர், வலம்புரி
ஆசிரியர்)
அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.



வலம்புரியின் உருவாக்கத்திற்கு தோள்
கொடுத்து உதவிய பெருமக்களுக்கான
வலம்புரி விருது
**திரு.ந.லிங்கேஸ்வரன்**
(ஆசிரியர்)
அவர்களுக்கு வழங்கி
கௌரவிக்கப்படுகிறது.

# வலம்புரி
# 20 ஆண்டு நிறைவு விழா

**காலம்** 20.12.2019 (வெள்ளிக்கிழமை)
**இடம்** துர்க்கா மணிமண்டபம்,நல்லூர்
**நேரம்** பிற்பகல் 3.00 மணி

தலைவர்
**திரு.சிவஞானம் வெற்றிவேலாயுதம்**
(நிர்வாக இயக்குநர்-வலம்புரி)

பிரதம விருந்தினர்
**பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை**
(முன்னாள் துணைவேந்தர்-யாழ் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்
**பேராசிரியர் ப.சிவநாதன்**
(ஓய்வுநிலை,பொருளியல் பேராசிரியர்.)
**பேராசிரியர் கு.மிகுந்தன்**
(பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
**வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி**
(பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)
**திருமதி P.F.சின்னத்துரை**
(ஓய்வுநிலை அதிபர்)

## ஆசியுரைகள்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**
(ஆதீன முதல்வர், நல்லை ஆதீனம்)
**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக் குருக்கள்**
(குருபீடாதிபதி, வீணாகான குருபீடம்)
**அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார்**
(ஊடக வருகை விரிவுரையாளர்,திறந்த பல்கலைக்கழகம்)
**சுவாமி சிதாகாசானந்தா**
(வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்)
**கலாநிதி ஆறு.திருமுருகன்**
(தலைவர்-ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
**அதிவண.பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
(முன்னாள் பேராயர், தென்னிந்திய திருச்சபை)
**அல்ஹாஜ் ஏ.எம்.அஸீஸ் மௌலவி (காஸிமி)**
(தலைவர்-யாழ்.கிளிநொச்சி மாவட்ட உலமா சபை)

நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தல்
**செந்தமிழ் சொல்லருவி திரு.ச.லலீசன்**
(பிரதி அதிபர்-கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை)

## நிகழ்ச்சிநிரல்

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்பு நடனம்
  (பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவிகள்-நெறியாள்கை திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்)
- வரவேற்புரை
  திரு.கணேசன் திருமாலழகன் (வலம்புரி)
- ஆசியுரைகள்
- தலைமை உரை
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- சிறப்புரை
  திரு.நல்லையா விஜயசுந்தரம் (வலம்புரி)
- கௌரவிப்பு நிகழ்வு
- நன்றியுரை
  திரு.மாவை.நா.கஜேந்திரன் (முகாமையாளர்-வலம்புரி)

வலம்புரியின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உங்கள்
அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.


இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

-வலம்புரிக் குடும்பம்-

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## புதிய அரசாங்கம் ஆட்சிபீடமேறி

# ஒரு மாத காலத்திற்குள்ளாகவே பல்வேறு மோசமான அடக்குமுறை



(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுத்தருமாறு ஆளுந்தரப்பு மக்களிடம் கோருகின்றது. ஆட்சிபீடமேறிய புதிய அரசாங்கம் பெரும்பான்மைப்பலம் இல்லாத வேளையில் ஒரு மாத காலத்திற்குள்ளாகவே பல்வேறு மோசமான அடக்குமுறை செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

அவ்வாறிருக்க பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டால் எத்தகைய நிலையேற்படும் என்பதை சிந்தித்து, எதிர்வரும் பொதுத்தேர்தலில் நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் பாதிப்பற்ற பொருத்தமான தெரிவொன்றுக்கான மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் ஆட்சிபீடமேறிய ஒரு மாதகாலத்தில் அவர்கள் ஏற்கனவே செய்யமாட்டோம் என்று கூறியவற்றைச் செய்துகொண்டும், செய்வதாகக் கூறியவற்றைச் செய்யாமலும் இருக்கின்றது. குறிப்பாக சுவிஸ் தூதரகப் பணிப்பாளர் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் விசாரணைகளை வெளிப்படைத்தன்மை உடையதாகவும், உரிய முறையிலும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அந்நாடு வலியுறுத்தும் அளவிற்கு நிலைமை தீவிரமடைந்திருக்கிறது.

இத்தகைய செயற்பாடுகள் உள்நாட்டிற்குள் மாத்திரமன்றி, சர்வதேச மட்டத்தில் எமது நாட்டின் நன்மதிப்பிற்குக் களங்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. தேசப்பற்றாளர்கள் என்று கூறிக்கொண்டிருப்போரின் செயல்கள் இத்தகையதாகவே அமைந்துள்ளன.

அதேபோன்று தற்போது அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் வெகுவாக அதிகரித்திருக்கின்றன. அரச சேவையில் முறையாக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்த ஊழியர்கள் தற்போது எவ்வித காரணங்களுமின்றி நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஊதிய வழங்கல் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு ஜனாதிபதியையும், ஜனாதிபதி செயலாளரையும், பாதுகாப்புச் செயலாளரையும் சந்திப்பதற்கு முற்பட்ட போதிலும் அது சாத்தியமாகவில்லை.

எனவே ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலாளரைச் சந்தித்து இவ்விடயம் குறித்து விளக்கமளிக்கும் கடிதத்தைக் கையளித்திருந்தோம். அவ்வாறு கையளித்து 15 நாட்கள் கடந்துள்ள நிலையிலும் கூட எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அடுத்ததாக ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படும் சம்பவங்களும் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன. எமது ஆட்சிக் காலத்தில் ஊடகங்கள் எம்மை மிக மோசமாக விமர்சித்தன. எனினும் நாம் ஊடகங்களை அச்சுறுத்தும் வகையிலான எந்தவொரு செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை.

ஆனால் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு மாதகாலத்திற்குள்ளாகவே பல ஊடகவியலாளர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஊடகநிறுவனங்கள் சோதனையிடப்பட்டிருக்கின்றன.

ஆனால் அத்தகைய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் சிலவற்றில் பாதிக்கப்பட்டவரின் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்குக் கூட பொலிஸார் மறுத்துள்ளனர். புதிய ஆட்சியில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை விரைந்து விசாரணைக்கு உட்படுத்துமாறு வலியுறுத்துவதிலும் பார்க்க, பொலிஸார் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திப் போராட்டம் நடத்த வேண்டிய நிலையொன்று ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை காலமும் பொலிஸ் ஊடகப்பிரிவு உண்மையான தகவல்களை வழங்கிவந்தது. ஆனால் தற்போது அந்த பொலிஸ் ஊடகப் பிரிவு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. பொலிஸாரின் சீருடை ஆளுந்தரப்பின் கால்துடைப்பமாக மாற்றப்பட்டுள்ளது. ஊடகப்பிரதானிகளை இருமுறை ஜனாதிபதி சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இவையனைத்தும் "எமக்கு வேண்டிய விதத்தில் செயற்படுங்கள். இல்லாவிட்டால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக நேரிடும்" என்று எச்சரிக்கும் விதமாகவே அமைந்துள்ளன.

எமது ஆட்சியில் அத்தியாவசியப் பொருட்கள், மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பதாகக் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால் தற்போது அவர்களுடைய ஆட்சியில் முன்பிருந்ததை விடவும் விலைகள் அதிகரித்துள்ளன. இதுபற்றி ஊடகங்களோ, தேரர்களோ, அரச வைத்திய அதிகாரிகள் சங்கமோ அல்லது ஏனைய தரப்புக்களோ வாய் திறக்காதது ஏன் என்று புரியவில்லை.

இந்நிலையில் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இல்லாதொழிப்பதற்கு பாராளுமன்றத்தில் தமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுத்தருமாறு தற்போது ஆளுந்தரப்பு கோருகின்றது. அதனூடாக அவர்கள் பெரும்பான்மையற்ற ஓர் அரசாங்கம் என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆட்சிபீடமேறிய புதிய அரசாங்கம் பெரும்பான்மைப்பலம் இல்லாத வேளையில் ஒரு மாதகாலத்திற்குள்ளாகவே இவ்வாறு செயற்படுகின்றதெனின், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டால் எத்தகைய நிலையேற்படும் என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நீதிமன்ற வளாகத்தில் பெண் கொலை இரண்டு பொலிஸார் பணி நீக்கம்

(கேகாலை)

கேகாலை மேல் நீதிமன்ற வளாகத்தில் பெண் ஒருவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில், நீதிமன்ற வளாகத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை வழக்கு நடவடிக்கைகளுக்காக குறித்த பெண் சென்ற வேளையிலேயே உயிரிழந்த பெண்ணின் கணவரால் குறித்த தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே சம்பவதினத்தன்று கடமையில் இருந்த இரண்டு பொலிஸார் பணி நீக்கம் செய்யப்பட்டனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அகத்தூய்மை

எப்பவும் சுத்தமாக இருக்க வேண்டும்! அதுதான் நல்லது என்றார் ஒருவர் நான் அப்படித்தான் சேர் இருக்கிறேன். தினமும் இரண்டு வேளை சோப்புப் போட்டுக் குளிக்கிறேன் என்றார் இன்னொருவர். உடம்பு மட்டும் சுத்தமாக இருந்தா போதாது சேர். மனசு மட்டும் சுத்தமாக இருக்க வேண்டும் என்றார் அவர். மனதைச் சுத்தப்படுத்துவதற்கு என்ன சோப் சேர் போடலாம் என்று கேட்டார் இவர். ஆன்மீகம் என்ற சோப்புத்தான் அதுக்குப் பொருத்தம் என்றார் அவர். ஆன்மாவை மேம்படுத்துகிற ஒரு முயற்சி தான் ஆன்மீகம். அந்த முயற்சியை எப்படிச் செய்வது? மனதுக்குள்ளே குந்தியிருக்கிற வேண்டாத விருந்தாளிகளை யெல்லாம் வெளியகற்ற வேண்டும். அப்படிப்பட்ட வேண்டாத விருந்தாளிகளிலே முக்கியமான ஒருவர் பொறாமை. இவர் நம் மனசுக்குள்ளே இருக்கிற வரைக்கும் நாம் நிம்மதியாக இருக்க முடியாது! ஒரு குருநாதர் இருந்தார். அவரிடம் இரண்டு சீடர்கள் இருந்தார்கள். இரண்டு பேரும் ஆரம்பத்திலே ஒருவருக்கு ஒருவர் நல்லபடியாகத்தான் பழகிக் கொண்டு இருந்தார்கள். ஆனாலும் என்னமோ தெரியவில்லை. கொஞ்ச நாளிலே அந்த இரண்டு பேரிலே இன்னொருவன் மனசுக்குள்ளே பொறாமை என்கிற விருந்தாளி வந்து உட்கார ஆரம்பித்து விட்டார். அந்த சீடனும் அதற்கு இடம் கொடுத்துவிட்டான். குருவிடம் தான் நல்ல பெயர் வாங்க வேண்டும். தன் நண்பன் கெட்ட பேர் வாங்க வேண்டும் என்றும் அவனுக்கு ஒரு ஆசை உண்டாகியது. என்ன செய்யலாம் என்று யோசித்தான். ஒரு நாள் விடியற்காலையில் எழுந்திருந்தான். நேராக குருவிடம் சென்று அவர் முன்னால் நின்றான். குருவே என்னைப் பாருங்க ! நான் எவ்வளவு சீக்கிரமாக எழுந்திருந்து குளித்து முடித்து விட்டு உங்களை வணங்குவதற்காக வந்து நிற்கிறேன். ஆனா இன்னும் அவன் கண் முழிக்க வில்லை இன்னமும் தூங்கிக் கொண்டே இருக்கிறார் என்றான். குருநாதர் நிமிர்ந்து பார்த்தார் . அப்படியா? அப்படியென்றால்... நீயும் கூட அவனை மாதிரியே தூங்கியிருந்தால் நல்லாக இருக்கும் என்றார் ரொம்பப் பொறுமையாக. என்ன.இது? நாம் எவ்வளவு தீவிரமாக ஒரு விடயத்தைச் சொல்கிறோம். அதற்கு நம் குருநாதர் ரொம்பப் பொறுமையாக இப்படி சொல்கிறாரே! என்று நினைத்தான். ஆச்சரியமாக அவரைப் பார்த்தான். குருநாதர் சொன்னார் ஆமாமப்பா.. நீயும் தூங்கிக் கொண்டு இருந்தால் அடுத்தவனைப் பற்றிக் குறை சொல்ல இங்கே வந்திருக்க மாட்டாய். இல்லையா? அதனாலே அப்படி சொன்னேன் என்றார். சீடன் யோசிக்க ஆரம்பித்தான் . மனசு சுத்தமாச்சு.

மனசுக்குள்ளேயிருந்து விரட்ட வேண்டிய இன்னொரு விருந்தாளி கோபம். சினம் தன்னையே கொன்றுவிடும் என்கிறார் திருவள்ளுவர். கோபத்துக்கு மனதில் இடம் கொடுக்காத பெரியவர்களும் உண்டு. குருநாதர் என்று ஒருவர் இருந்தார். அவர் ஒரு சமயம் கோதாவரி நதியிலே போய் குளித்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தார். வருகிற வழியிலே ஒரு மரத்து மேலே உட்கார்ந்திருந்த ஒருவன் அவர் மேலே துப்பிவிடுகிறான். இவரு உடனே திரும்பி போயி மறுபடியும் குளித்து விட்டு வருகிறான். அப்பவும் துப்பிவிடுகிறான் . இவர் உடனே திரும்பி போய் மறுபடியும் குளித்து விட்டு வருகிறார். அப்பவும் துப்பி விடுகிறான். அவர் கோபமே படவில்லை பேசாம மறுபடியும் போய்க் குளித்து விட்டு வருகிறார். இப்படி பல தடவை நடந்து கொண்டே இருந்தது. ஒரு கட்டத்திலே அந்த ஆளு தோற்றுப் போய் அவர் காலிலேயே விழுந்து விடுகிறான். ஆச்சரியப்பட்டுக் கேட்கிறான். அது எப்படிங்க? நீங்க கோபப் படாமல் இருந்தீர்களே! அது எப்படி என்றான். அதுக்கு அந்த பெரியவர் சொல்கிறார். நான் கோபப்பட்டு இருந்தால் என் மனசு அசுத்தமாக இருந்திருக்கும் உடம்பு அசுத்தமானால் குளித்துச் சுத்தப்படுத்திக்கலாம். மனதை அப்படிச் சுத்தப்படுத்த முடியாது என்றார். ஆகக் கூடி மனசு அசுத்தமாகாமலே பார்த்துக்க வேண்டியது நம்ம கடமை. மனசை அசுத்தப்படுத்துகிற இன்னொரு விஷயம் தான் சுயநலம்.

ஒரு சுயநலவாதி ஆற்றிலே விழுந்துவிட்டார். சுழலிலே சிக்கிவிட்டார். இன்னொரு சுயநலவாதி கரையிலே இருந்து இதைப் பார்த்தார். ஒரு கயிற்றைத் தூக்கிப் போட்டு அதைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி கரையிலே இழுத்துக் காப்பாற்றினார். அவர் கரையிலே ஏறின உடனேயே இவரைப் பார்த்து என்னைக் காப்பாற்றினதுக்காக உங்களுக்கு 50 காசு கொடுக்கலாம் என்று பார்க்கிறேன். ஆனால் என்னிடம் ஒரு ரூபாயாக இருக்கிறது என்றார். உடனே காப்பாற்றினவர் இவரைப் பார்த்து அப்படி என்றால் நீங்கள் இன்னொரு தடவை தண்ணீரிலே விழுந்திடுங்கள். நான் காப்பாற்றுகிறேன். ஒரு ரூபாயாகக் கொடுத்து விடலாம் என்றார். இப்படிப்பட்டவர்களெல்லாம் எத்தனை தடவை தண்ணிரியில் விழுந்தாலும் மனசு சுத்தமாகப் போறதில்லை.

# தலைமை தாங்கத் தயார்

# பதவிகளுக்காக ஐ.தே.க. ஒருபோதும் பிளவடையாது

## சஜித் திட்டவட்டம்



(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தமையால் பொதுத் தேர்தலில் வெற்றி பெற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அந்த வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு பரந்துபட்ட கூட்டணிக்குத் தலைமை தாங்கத் தயார் என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ பதவிகளுக்காக ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் பிளவடையாது என்றும் தெரிவித்தார்.**

தேர்தலில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி கூறுவதற்காக ஒவ்வொரு தொகுதிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் சந்திப்புக்களில் முதலாவது மக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் கொலன்னாவையில் இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் உரையாற்றுகையிலேயே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

கொலன்னாவை தொகுதியில் தனக்கு வாக்களித்த 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களுக்கு நன்றி தெரிவித்த அவர், பொதுத் தேர்தலிலும் இந்த ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

**"ஆட்சி மாற்றத்தின் பின்னர் பல்வேறு அரசியல் பழிவாங்கல்கள், சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவ்வாறு அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க அவர்களுடன் இணைந்து ஜனநாயக ரீதியில் போராடுவதற்கு தயாராக இருக்கின்றோம். இந்தப் போராட்டங்களுடன் புது முகங்களையும் புதுக் கொள்கைகளையும் இணைத்துக் கொள்வோம்."**

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகினேன். நாம் பதவிகள் மீது மோகம் கொண்டு அரசியலில் ஈடுபடுபவர்கள் அல்ல.

எனவே பதவிகளுக்காக ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சி பிளவு படாது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தமையால் பொதுத் தேர்தலில் வெற்றி பெற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அந்த வெற்றியை நோக்கிய பயணத்திற்கு தலைமை வகிக்க நான் தயாராக இருக்கின்றேன்.

எதிர்க்கட்சியாக நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் சிறப்பாக நிறைவேற்றுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முழுப் பலத்துடன் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயார்

## உபதலைவர் பியதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முழுப் பலத்துடன் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயார் என அக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.


அதற்கான கூட்டு நடவடிக்கைகள், கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் விரைவிரல் ஆரம்பமாகவுள்ளது.



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிறந்த ஒத்துழைப்பை வழங்கியது.

தற்போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய, எதிர்வரும் பொதுத் தேர்தலில் கதிரைச் சின்னத்தின் கீழ் பரந்த கூட்டணியின் கீழ் போட்டியிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த ஒப்பந்தம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற போதிலும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர் கட்சியின் தலைவர் என்பதால் அந்த ஒப்பந்தம் ஒருபோதும் மாற்றமடையாதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபைக்குரிய உப்பு ரோடு பகுதியில் பார்த்தீனியச் செடிகள் அதிகளவில் வளர்ந்து காணப்படுகின்றன.

(படங்கள்:- மகாலிங்கம்)

# புலிகள் விவகாரம்; சந்துருவின் வழக்கு உயர் நீதிமன்றத்துக்கு மாற்றம்

(கோலாலம்பூர்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பான தகவல்களை தொலைபேசியில் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட மலேசிய அரசு சார்பு நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எஸ்.சந்துரு மீதான வழக்கு கோலாலம்பூர் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.



'சொஸ்மா' எனப்படும் பாதுகாப்புக் குற்றங்கள் (சிறப்பு நடவடிக்கைகள்) சட்டம் 2012, பிரிவு 13 இன் கீழ் வரும் எல்லாக் குற்றங்களும் கோலாலம்பூர் உயர் நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்பட வேண்டும் என்று அரசாங்க சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

இதன்போது சந்துரு சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மெல்வின் டே, தமது கட்சிக்காரர் மீது மலாக்கா அமர்வு நீதிமன்றத்தில் மேலும் ஒரு வழக்கு விசாரணையில் இருப்பதால் விடுதலைப் புலி விவகாரம் தொடர்பாக அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான வழக்கும் அந்த நீதிமன்றத்திலேயே விசாரிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

எனினும் அதை ஏற்க மறுத்த நீதிபதி, சந்துரு மீதான வழக்கை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றி உத்தரவிட்டார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 250 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 220 | 180 | 250 |
| தக்காளி | 160 | 120 | 140 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 220 | 100 | 80 |
| கோவா | 140 | 120 | 140 | 110 | 120 |
| கரட் | 300 | 320 | 240 | 240 | 400 |
| பூசணி | 60 | 50 | 50 | 70 | 80 |
| புடோல் | 150 | 180 | 160 | 80 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 430 | — | 420 | 600 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 350 | 400 | 320 | 310 | 320 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 80 | 70 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 120 |
| பயற்றங்காய் | 240 | 260 | 200 | 190 | 200 |
| லீக்ஸ் | 120 | 380 | 360 | 340 | 400 |
| பீற்றூட் | 150 | 200 | 200 | 100 | 200 |
| கறிமிளகாய் | 250 | 260 | 220 | 220 | 240 |
| முருங்கைக்காய் | — | — | 800 | — | 800 |
| போஞ்சி | 240 | 240 | 280 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | — | 160 | 160 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 60 | 100 | 80 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 30-60 | 55 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | 240 | 240 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — | — |
| முள்ளங்கி | 140 | 160 | 130 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 30 | 30 | 30 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 180 | 100 |

# இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம்

# 13 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

- காற்றின் வேகம் அதிகரிக்கும்
- கடல் கொந்தளிக்கும்
- வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை மாவட்டத்திலும் மழையுடனான வானிலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று புதன்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

குறித்த அறிக்கையில், 'நாட்டின் வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பல இடங்களில் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் காலை வேளையிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் நுவரெலியா, மாத்தளை, பொலநறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில இடங்களில் 100-150 மி.மீ. அளவான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் காலி மாவட்டங்களிலும் சில இடங்களில் 75-100 மி.மீ. அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமத்திய, வடமேல், மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் காலைவேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

காங்கேசன்துறையிலிருந்து முல்லைத்தீவு, மட்டக்களப்பு, பொத்துவில் மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் சில இடங்களில் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புக்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்களில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக் கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

திருகோணமலையிலிருந்து காங்கேசன் துறை, மன்னார் மற்றும் புத்தளம் ஊடாக நீர்கொழும்பு வரையான கடற்பரப்புக்களிலும் மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புக்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் ஓரளவு கொந்தளிப்பாகவும் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது (மணித்தியாலத்துக்கு 70-80 கிலோ மீற்றர் வரையான) பலமான காற்றும் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்' என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கையின் 13 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறைக் கைதிகளிடமிருந்து 800 தொலைபேசிகள் பறிமுதல்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்ட கைதிகளிடமிருந்து சுமார் 800 கையடக்கத் தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இவை கைப்பற்றப்பட்டதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மகசின் சிறைச்சாலையிலேயே அதிகமான கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனைத் தவிர, களுத்துறை மற்றும் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை உள்ளிட்ட சில சிறைச்சாலைகளில் அநேகமான கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன.

இந் நிலையில் தொடர்ந்தும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# உதவித்திட்டம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மைக்கல் நேசக் கரத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு போரால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கான உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மாலை சந்தை திருமண மண்டபத்தில் மாலைசந்தை மைக்கல் விளையாட்டுக் கழகத் தலைவர் த. வேணுகானன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதமவிருந்தினராக சமூக சேவையாளர் எஸ். பிறேம்குமார், சிறப்பு விருந்தினர் களாக, நெல்லியடி மத்திய கல்லூரி ஓய்வுநிலை அதிபர் எஸ். சேதுராசா, மாலைசந்தை ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலயத் தலைவர் எஸ். சிறீசண்முகதேவ், ஊடகவியலாளர் இ. தயாபரன், உக்ரம் அறக் கட்டளை நிறுவுநர் ஞா. ஆதவன், சிறகுகள் அமைய இயக்குநர் த. சுஜீவன், உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ம. தனுஷன் அகில இலங்கை சைவ மகாசபை உபதலைவர் ந. பொன்ராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

# சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக விண்ணப்பித்த 55 வீதமானோர் தேர்ச்சி பெறத் தவறியுள்ளனர்

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட வாகனச் சாரதி விண்ணப்பதாரர்களுக்கான வைத்திய பரிசோதனையில் 55.35 சதவீதமானோர் தேர்ச்சி பெற தவறியுள்ளதாக தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனம் தெரிவித்தது.

இதற்குக் காரணம் கண் பார்வை குறைபாடு என பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்தது.

2019 ஆம் ஆண்டில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட மொத்த வைத்திய பரிசோதனையின் எண்ணிக்கை 8 இலட்சத்து 72 ஆயிரத்து 769 ஆகும்.

மருத்துவ பரிசோதனையில் தற்காலிகமாக தேர்ச்சி பெறாத வாகன சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து ஆயிரத்து 598ஆகும். வலிப்பு, உளவியல் நோய் போன்ற காரணங்களால் தேர்ச்சி பெற தவறிய விண்ணப்பதார்களின் எண்ணிக்கை 13 சதவீதமாகும்.

2019 ஆம் ஆண்டு அனுமதிப் பத்திரத்திற்காக விண்ணப்பித்தவர்களில் 2.49 சதவீதமானோர் இருதய நோயினாலும் 10.5 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் இரத்த அழுத்தத்தினாலும் 25.35 சதவீதமானோர் நீரிழிவு நோயினாலும், ஏனைய நோய்களின் காரணமாக 6.78 சதவீதமானவர்களும் தற்காலிக வைத்திய பரிசோதனையில் தேர்ச்சி பெற தவறியுள்ளனர்.

2018 ஆம் ஆண்டில் 11.40 சதவீதமானோர் இவ்வாறு தேர்ச்சி பெறத் தவறினர். இவ்வருடத்தில் 11.69 சதவீதமானோர் தேர்ச்சி பெறத் தவறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வலிப்பு ஏற்பட்டு கிணற்றிற்குள் தவறி விழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தண்ணீர் அள்ளும் போது வலிப்பு ஏற்பட்டு கிணற்றிற்குள் தவறிவிழுந்த ஒருவர் மரணமடைந்தார்.இச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை காலை 7.30 மணியளவில் மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது.இதில் சாவகச்சேரியை சேர்ந்த சிவராசா சிவகுமாரன் (வயது56) என்பவரே மரண மடைந்தார்.(இ-5-114)

# அண்ணன் அதிவேகமாகச் செலுத்திய உழவியந்திரத்திலிருந்து தவறி விழுந்த சகோதரர்களில் ஒருவர் ஸ்தலத்தில் பலி!

(ஏறாவூர்)

அண்ணன் அதிவேகமாகச் செலுத்திய உழவு இயந்திர இழுவைப் பெட்டியிலிருந்து தவறி விழுந்த இரு சகோதரர்களில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்.


நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8.40 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மைலம்பாவெளி கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ்கரலிங்கம் சஞ்ஜை (வயது-16) என்ற சிறுவனே பலியானார்.

சகோதரர்களான சுரேஷ்கரலிங்கம் நிதர்ஷன் (வயது-18) என்பவர் உழவியந்திரத்தை அதன் இழுவைப் பெட்டியுடன் செலுத்திச் செல்ல மற்றைய தம்பிகளான சுரேஷ்கரலிங்கம் சஞ்ஜை (வயது-16), சுரேஷ்கரலிங்கம் வினித் (வயது-17) ஆகிய இருவரும் உழவு இயந்திரப் பெட்டியில் ஏறி அமர்ந்து கொண்டு சென்றனர்.

உழவு இயந்திரம் ஏறாவூரிலிருந்து கித்துள் நோக்கி வேகமாகச் செலுத்திச் செல்லப்படும்போது பதுளை வீதி-பங்குடாவெளி எனுமிடத்தில் வைத்து உழவு இயந்திரப் பெட்டியில் அமர்ந்திருந்து பயணம் செய்த சகோதரர்கள் இருவரும் திடீரென வீதியில் விழுந்தனர்.

இதில் படுகாயமடைந்த இரு சகோதரர்களில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகினார். மற்றையவரான சுரேஷ்கரலிங்கம் வினித் (வயது -17) படுகாயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் உழவு இயந்திரத்தை செலுத்திச் சென்ற வரும் பலியான சிறுவனின் சகோதரருமானி நிதர்ஷனைக் கைது செய்தனர். (இ-7)


இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் தலைமையில் இம்மானுவேல் ரவிச்சந்திரன், சிவஸ்ரீ சபாரட்ண சர்மா, வாசுதேவ சர்மா, பேராசிரியர் வி.பி.சிவநாதன், ஓய்வுநிலை அதிபர் அருந்தவபாலன், வைத்திய கலாநிதி சி.சிவன்சுதன், சட்டத்தரணி திருமதி சு.சிவரூபன், கட்டடக்கலைஞர் த.சிற்பரன் மற்றும் ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் க.இராஜதுரை ஆகியோரின் அங்கத்துவத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலாவது திட்ட நிகழ்வாக வடமராட்சி மருதங்கேணிப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்கும் நிகழ்வு மருதங்கேணி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களை கட்டுப்படுத்த புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த அரசு தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்துகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஏராளமான வேட்பாளர்கள் களமிறங்கியதை தொடர்ந்தே, இந்த நடவடிக்கையில் அரசு இறங்கியுள்ளது.

அதிக வேட்பாளர்கள் களமிறங்குவதால் தேர்தலுக்காக அரசாங்கமும் பெரும் செலவுகளைச் செய்ய வேண்டியிருந்தது. கணிசமான வேட்பாளர்கள் களமிறங்கினாலும், தேர்தலில் போட்டியிட்ட பெரும்பான்மையான வேட்பாளர்கள் 0.1 வீதமான வாக்குகளைக் கூடப் பெறவில்லை.

அதன்படி, ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டிய விதம் குறித்து ஆராய சட்டமா அதிபர் திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் நீதி அமைச்சின் பிரதிநிதிகள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது.

அதன்படி, எதிர்காலத்தில் தேவையற்ற வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்கவும், கட்டுப்பணத்தை அதிகரிக்கவும் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு தற்போதுள்ள சட்ட ரீதியான தடைகளை நீக்குவதில் கவனம் செலுத்துவதாகவும் கூறப்படுகிறது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா சம்பந்தப்பட்ட குழுவிடம் தகுந்த திருத்தங்கள் குறித்து விவாதித்து உடனடித் தீர்வை முன்மொழியுமாறு கேட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1921

Search for people, places and things

### நிர்மலன்

அண்ணே... எனக்கு ஒரு பத்து ரூபாய் காசு கொடுங்கண்ணே...
என்கிட்ட சுத்தமா காசு இல்லடா...
அழுக்கா இருந்தாலும் பரவாயில்லை கொடுங்கண்ணே...




### டிஷா



பேசாம அம்மா மடியிலேயே தவழ்ந்து கிட்டும் விளையாடிக் கிட்டும் இருந்திருக்கலாம் போல... இப்படி அவசரப்பட்டு வளர்ந்து புட்டு... ஒவ்வொரு நாளும் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியதா இருக்கு...

### விஜிதா

இன்று வரும் துன்பங்களை கண்டு ஓடி ஒழிந்தால்... நாளை வரும் இன்பங்களை யார் வரவேற்பது..!



### அனிஸ்ரன்

நம்ம ராசிக்கு 2020 வருஷம் எப்படி இருக்குனு பார்ப்போம்.



அட நாசாமா போறவனே...

### நிறைஞ்சலா




### தீபன்

பிரியமானவர்களில் இரண்டே விதம்தான், உரிமைக்காக சிலர்... தேவைக்காக சிலர்..!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## "குடியுரிமைச் சட்டமா? குழி பறிக்கும் சட்டமா?"

# தமிழகம் முழுவதும் தி.மு.க. ஆர்ப்பாட்டம்





(சென்னை)

குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் (டிசெம்பர் 17) தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காஞ்சிபுரத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசிய தி.மு.க. தலைவர் ஸராலின், "பல நூறு ஆண்டுகளாக இருக்கும் ஒற்றுமையில் நஞ்சை கலக்கும் ஆட்சியாக பா.ஜ.கவின் ஆட்சி நடைபெற்று வருகிறது. இது குடியுரிமைச் சட்டமா? அல்லது குழி பறிக்கும் சட்டமா? இஸ்லாமியர்களும் ஈழத்தமிழ் மக்களும் குடிமக்கள் இல்லையா? எதற்காக இந்த ஓர வஞ்சனை?" என்று கேள்வி எழுப்பினார்.

சென்னையில் தி.மு.க. சார்பில் நான்கு இடங்களில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டங்களில் தி.மு.கவினர் கணிசமாகக் கூடியிருந்தனர். சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் சேப்பாக்கத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மக்களவை உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டனர். சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆதம்பாக்கத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி எம்.பியும், வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தண்டையார் பேட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாதவரம் சுதர்சனம், கலாநிதி வீராசாமி எம்.பி.ஆகியோரும் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் தி.மு.க. பொருளாளர் துரைமுருகன் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் இஸ்லாமியர்கள் உட்பட நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். ராணிப்பேட்டையில் தி.மு.கவினர் மற்றும் கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் காந்தி தலைமையில் 500 இற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை, வேலூர், மதுரை, விழுப்புரம் போன்ற இடங்களில் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பெருமளவானோர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## ஆப்கானில் அரசபடைகள் தாக்குதல் 11 தலிபான்கள் உயிரிழப்பு

## துப்பாக்கிகள்,வெடிபொருட்கள் மீட்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் படையினர் நடத்திய அதிரடி தேடுதல் வேட்டையில் 11 தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் பல பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள தலிபான் பயங்கரவாதிகள் அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர். மேலும், தங்கள் ஆளுமைக்கு கட்டுப்படாத மக்களை ஈவு இரக்கமின்றிக் கொன்று குவித்து வருகின்றனர்.

மேலும், பயங்கரவாதிகள், இராணுவம் மற்றும் பொது மக்களை குறிவைத்து தற்கொலைப் படைத் தாக்குதல், குண்டுவெடிப்பு போன்ற தாக்குதல் சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றனர்.



இவர்களை அழிக்கும் நடவடிக்கையில் உள்நாட்டு அரசப்படைகளும் இணைந்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளும் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் அரசுப் படைகளுக்கும் தலிபான் பயங்கரவாத குழுக்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், அந்நாட்டின் குன்டூஸ் மாகாணத்தின் சாஹர் தாரா மாவட்டத்திற்குட்பட்ட இசாஹில் கிராமத்தில் தலிபான் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அப்பகுதியில் சிறப்பு படையினர் நேற்று முன்தினம் இரவு அதிரடி தேடுதல் வேட்டை நடத்தினர். இதில் 11 தலிபான் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும், துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்கள் உள்ளிட்ட பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. (ஜ-2)

## ஈரான் போராட்டத்தில் 304 பேர் உயிரிழப்பு

### அம்னெஸ்டி தகவல்

(தெஹ்ரான்)

ஈரானில் அரசாங்கத்திற்கெதிரான போராட்டத்தில், இதுவரை 304 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச தன்னார்வ அமைப்பான அம்னெஸ்டி தெரிவித்தது.

ஈரானில் சில வாரங்களுக்கு முன்னர் எரிவாயுப் பொருட்களின் விலை உயர்வுக்கு எதிரான போராட்டம் நடத்தப்பட்டது. இதில் போராட்டக்காரர்களுக்கு எதிராக ஈரான் பாதுகாப்புப் படைகள் நடத்திய தாக்குதலிலேயே இவர்கள் உயிரிழந்ததாக கூறப்படுகின்றது.

இதுகுறித்து அம்னெஸ்டி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஈரானில் அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்தில் பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், மாணவர்கள் என ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை ஈரான் அரசு கைது செய்துள்ளது. மேலும் இந்தப் போராட்டத்தில் 304 பேர் உயிரிழந்துள்ளனர்' என்று தெரிவித்தது.

வரலாற்று சிறப்பு மிக்க அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஈரான் மீறியதாக கூற எண்ணெய் வளம் மிக்க நாடான ஈரான் மீது, அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது.

இதனால், கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள ஈரான், மானியம் முறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. ஒரு காருக்கு மாதம் 60 லீற்றர் மட்டுமே வழங்கப்படும். அந்த அளவுக்கு மேல் வாங்க வேண்டுமானால் அதற்கு இருமடங்கு விலை தர வேண்டும். மேலும் இணையத்தள சேவைகளிலும் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. தற்போது ஈரானில் படிப்படியாக வன்முறை குறைந்து நாட்டில் இயல்பு நிலை திரும்பியுள்ளதாக கூறப்படுகின்றது. (2)

## குடியுரிமை சட்டத்திற்கு எதிராக போராட்டம் டில்லியில் 144 தடை உத்தரவு பிறப்பிப்பு

(டில்லி)

குடியுரிமை சட்டத்துக்கு எதிராக டில்லியில் இடம்பெற்ற போராட்டத்தில் மோதல் இடம்பெற்றமையை தொடர்ந்து, பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டமையால் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.நேற்று முன்தினம் (செவ் வாய்க்கிழமை) டில்லியில் மோதல் ஏற்பட்ட சீலாம்பூர், ஜாபராபாத் பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

குடியுரிமை திருத்தச் சட்டத்தை எதிர்த்து நடத்தப்பட்டு வரும் போராட்டங்களில் வன்முறை நிகழ்ந்து வருகிறது. சீலாம்பூரில் 2 பொலிஸ் சோதனை சாவடிகளுக்கு தீ வைக்கப்பட்டதுடன் 2 பொலிஸ் வாகனங்கள் எரிக்கப்பட்டன.



கிழக்கு டில்லியில் நடந்த போராட்டம் வன்முறையாக மாற பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் போராட்டக்காரர்கள் 21 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிரியாவில் வான்வழித்தாக்குதல்; 23 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(பெய்ரூட்)

சிரியாவில் போராளிக் குழுக்களின் கடைசிக் கோட்டையாக விளங்கும் பகுதியில் அரசப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் பொதுமக்களில் 23 பேர் பலியாகினர்.


சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு மார்ச்சில் இருந்து கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 3 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் கூடுதலான மக்கள் பலியாகினர். இலட்சக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளை விட்டு வேறு இடங்களை தேடி தஞ்சம் புகுந்தனர்.

சிரியாவின் இட்லிப் பகுதியில் அல்கொய்தா பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடைய போராளி குழுக்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. எனினும், இந்தப் பகுதியை தங்களது கட்டுக்குள் கொண்டு வருவோம் என சிரிய அரசு தொடர்ந்து உறுதி கூறி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்பகுதியில் கடந்த ஏப்ரலில் நடந்த அரசு ஆதரவு படைகளின் தாக்குதலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடிமக்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலை அடுத்து 4 இலட்சத்திற்கும் கூடுதலான மக்கள் தங்களது வீடுகளை விட்டு விட்டு இடம் பெயர்ந்து சென்றனர்.

அரச படைகளின் தாக்குதலை தவிர்க்கும் வகையில் ரஷ்யா கடந்த ஓகஸ்ட் இறுதியில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்தது. ஆனால், இந்த ஒப்பந்தத்திற்கு பின்னரும் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதில் 250 பேர் வரை பலியாகினர்.

இந்நிலையில், பிரிட்டனை அடிப்படையாகக் கொண்ட சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள செய்தியில், அரச படைகள் நேற்று முன்தினம் நடத்திய வான்வழித் தாக்குதலில் பொதுமக்களில் 23 பேர் பலியாகினர். 30 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவித்துள்ளது. போராளிக் குழுக்களின் கடைசி கோட்டையாகக் கருதப்படும் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (ஜ-2)



# சிரியாவில் துருக்கிப் படையினரின் இன அழிப்பைத் தடுக்க வேண்டும்

## ட்ரம்பிடம் குர்து படைத்தளபதி வேண்டுகோள்

(பெய்ரூட்)

சிரியாவில் குர்து பகுதியில் துருக்கிப் படையினர் மேற்கொண்டுள்ள இன அழிப்பைத் தடுக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு குர்து படை தளபதி மஸ்லூம் வேண்டுகோள் விடுத்தார்.

துருக்கியினால் பயங்கரவாதிகள் என குறிப்பிடப்படும் குர்து இன கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக துருக்கி படையினர் உக்கிரத் தாக்குதலை தொடங்கியுள்ள நிலையில் குர்து படைதளபதி மஸ்லூம் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'அமெரிக்காவின் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் நிபந்தனைப்படி துருக்கி செயற்பட வலியுறுத்த வேண்டும். சிரியாவில் சிறுபான்மையினராக உள்ள குர்துகளை வெளியேற்ற துருக்கி செய்யும் பிரசாரத்தை அமெ ரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தடுத்து நிறுத்த வேண்டும். மேலும் அங்கு நடைபெறும் இன அழிப்பைத் தடுக்க வேண்டும்' என வலியுறுத்தனார்.

வடக்கு சிரியாவில் உள்ள தங்கள் எல்லைப் பகுதியில் இருந்து குர்து இன கிளர்ச்சியாளர்களை வெளியேற்றி பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்கி அந்த இடத்தில் துருக்கியில் உள்ள 36 இலட்சம் துருக்கி அகதிகளை குடியமர்த்த துருக்கி திட்டமிட்டது.

இதன் ஒரு கட்டமாக தற்போது துருக்கியினால் பயங்கரவாதிகள் என குறிப்பிடப்படும் குர்து இனக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்க ஆதரவு பெற்ற குர்து படைகளோடு துருக்கி நேரடியாக மோதலைத் தொடங்கியது.


முன்னதாக சிரியாவில் உள்ள ஜிகாதி குழுவான ஐ.எஸ்.படைகளை முறியடிப்பதில் அங்குள்ள குர்து ஆயுதப் படையான சிரிய ஜனநாயகப் படை அமெரிக்காவின் நண்பனாகச் செயற்பட்டது. ஆனால், நெருக்கடியான நேரத்தில் அதாவது இந்த தாக்குதல் தொடங்குவதற்கு முன்பாக சிரியாவில் இருந்த அமெரிக்கத் துருப்புகளை சர்ச்சைக்குரிய முறையில் அமெரிக்கா திரும்பப் பெற்றது.

அத்தோடு, துருக்கியினால் பயங்கரவாதிகள் எனக் குறிப்பிடப்படும் குர்து இன கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக துருக்கி இராணுவம் நடத்தவுள்ள தாக்குலுக்கு தாம் பொறுப்பேற்க மாட்டோம் என அமெரிக்கா தெரிவித்தது.

துருக்கி பிரதமர் தாக்குதலைப் பற்றி அறிவித்த அடுத்த நாளே அமெரிக்க அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த விடயத்தினை அமெரிக்கா தனக்கு முதுகில் குத்திய ஒரு துரோகமாக குர்து இனம் பார்க்கின்றது.

துருக்கியின் தாக்குதல் காரணமாக சுமார் 4 இலட்சம் மக்கள் சிரியாவின் வடக்குப் பகுதியிலிருந்து வெளியேறினர். பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் தொடர்ந்து சிரியாவின் வடக்குப் பகுதியை ஆக்கிரமித்துள்ள துருக்கி இராணுவம் குர்து படைகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)



# அமெரிக்காவுடன் வலுக்கும் மோதல்

## ஈரான் ஜனாதிபதி ஜப்பானுக்கு நாளை விஜயம்


(டெஹ்ரான்)

ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுஹானி அரசுமுறை பயணமாக ஜப்பானுக்கு செல்லவுள்ளதாக ஈரான் ஊடகம் செய்தி வெளியிட்டது.

ஜனாதிபதி ஹசன் ரவுஹானி, தனது முதல் வெளிநாட்டுப் பயணமாக நாளை வெள்ளிக்கிழமை ஜப்பான் தலைநகர் டோக்கியோ செல்லவுள்ளார்.

இந்தத் தகவலை, ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸியும் உறுதிப்படுத்தினார்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு பிறகு, ஈரான் தலைவர் ஒருவர் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



அணுசக்தி விவகாரத்தில் ஈரான் - அமெரிக்கா இடையே மோதல் வலுத்து வரும் நிலையில் அமெரிக்காவின் நட்பு நாடான ஜப்பானுக்கு ஈரான் ஜனாதிபதி மேற்கொள்வது சர்வதேச நாடுகளால் உற்றுநோக்கப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது. (ஜ-2)

# மெக்சிக்கோவில் துப்பாக்கிச்சூடு 8 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோவில் தேசிய பாதுகாப்பு படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய 8 பேர் கொல்லப்பட்டனர்.

அத்தோடு, இருதரப்புக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் ஒரு பாதுகாப்பு அதிகாரியும் கொல்லப்பட்டதோடு ஒருவர் காயமடைந்தார்.

மெக்சிக்கோவின் வடக்கு மாநிலமான குயனஜுவாட்டோவின் ஈராபுவாடோ நகருக்கு அருகே உள்ள நெடுஞ்சாலை அருகே துப்பாக்கி ஏந்திய மர்ம நபர்கள் அங்கு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தினர்.

இதன்போதே பதில் தாக்குதல் நடத்திய பாதுகாப்பு படையினர் குறித்த எட்டுப் பேரையும் கொன்று குவித்தனர்.



மெக்சிக்கோவில் கடந்த சில வருடங்களாக போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் அவர்களே இத்தாக்குதலை நடத்தியிருக்கக் கூடுமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதற்கிடையில், மத்திய மெக்சிக்கன் மாநிலமான குவானாஜுவாடோவில் ஒரு வார இடைவெளியில் 12 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். (ஜ-2)




# ஆவடியில் ஒரு வேலை



ராமன் பஸ்ஸுக்காகக் காத்திருந்தான். பஸ் நிறுத்தத்தைத் தாண்டிச் சில அடிகள் தள்ளி அந்தக் கார் நின்றது. காரிலிருந்து இறங்கிய இளைஞன் அவர் அருகில் வந்து "என்ன சேர் என்னைத் தெரியுதா?" என்றான்.

"ஓ! ரமணியா? எப்படி இருக்கே? அம்மா எப்படி இருக்காங்க?" என்றார் ராமன்.

"எல்லாரும் நல்லா இருக்கோம் சேர் உங்க புண்ணியத்தில. வீட்டில ஆண்ட்டி, ரவி, கமலி எல்லாரும் சௌக்கியம் தானே?...எங்கே சேர் போய்க்கிட்டிருக்கீங்க?"

"ஆவடி வரைக்கும் போகணும்ப்பா! அதான் பஸ்ஸுக்கு நின்னுக்கிட்டிருக்கேன்"

"நானும் அங்கதான் சேர் போறேன். வாங்க காரிலேயே போயிடலாம்"

"இல்லப்பா. நீ போ! உனக்கு எதுக்கு சிரமம்? நான் பஸ்லேயே போய்க்கிறேன்."

"எனக்கென்ன சேர் சிரமம்? காருக்குத்தான் சிரமம்! நானும் ஆவடிக்குத்தானே போறேன்? நீங்களும் வந்தா எனக்குப் பேச்சுத் துணையா இருக்கும்"

ராமன் கொஞ்சம் தயங்கி விட்டுக் காரில் ஏறிக் கொண்டார்.

சுமார் எட்டு வருடங்களுக்கு முன் ரமணியின் தந்தை திடீரென்று இறந்து விட்டார். அப்போது ரமணிக்கு வயது 18 இருக்கும். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். குடும்பத்தில் அவனும் அவன் அம்மாவும் மட்டும்தான்.

உலகம் தெரியாத அவன் அம்மாவும், அனுபவம் இல்லாத அவனும் செயலிழந்து நின்றபோது, அவர்கள் வீட்டுக்கு அருகில் குடியிருந்த ராமன்தான் அவர்களுக்கு எல்லா உதவிகளும் செய்தார்.

அவன் தந்தையின் காரியங்கள் முடிந்த பிறகு கூட ரமணிக்கும் அவன் அம்மாவுக்கும் மேற்கொண்டு செய்ய வேண்டிய விடயங்கள் பற்றிச் சரியான விபரம் தெரியவில்லை. அவர்கள் உறவினர்கள் யாரும் அருகில் வசிக்கவில்லை. அவர்களுடன் சில நாட்கள் தங்கி அவர்களுக்கு உதவி செய்யும் நிலையிலும் யாரும் இல்லை.

அப்போதும் ராமன்தான் உதவிக்கு வந்தார். ராமன் அவர்கள் குடும்பத்துக்கு நெருக்கமானவர் இல்லை. ரமணியின் தந்தையிடம் கூட எப்போதாவது ஓரிரு முறை பொதுவாகப் பேசியிருப்பார்.

ஆயினும், ரமணி மற்றும் அவன் தாயாரின் நிலையை உணர்ந்து கொண்டு, ஒரு நெருங்கிய நண்பர் போல் அவர்களுக்கு உதவினார் அவர்.

ரமணியுடன் அவன் தந்தையின் அலுவலகத்துக்குச் சென்று அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதியம், தொகுப்பூதியம் ஆகியவற்றைப் பெற்றுத் தந்தது, இன்ஷ்சூரன்ஸ் கம்பனிகளுக்கு விண்ணப்பித்து அவர்களுக்குச் சேர வேண்டிய இன்ஷ்சூரன்ஸ் தொகையைப் பெற்றுத் தந்தது, அவன் தந்தையின் பெயர்களிலிருந்த வங்கிக் கணக்குகளை அவன் தாயின் பெயருக்கு மாற்றித் தந்தது என்று கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் ரமணிக்கும் அவன் தாயாருக்கும் உதவியாக இருந்தார்.

ரமணியுடன் அவன் தந்தை வேலை செய்த அலுவலகம், இன்ஷ்சூரன்ஸ் நிறுவனாங்கள், வங்கிகள் என்று பல இடங்களுக்குப் பலமுறை போயிருப்பார், ஓரிரு நாட்கள் அவருடைய அலுவலகத்துக்கு லீவு போட்டு விட்டுக் கூட இவர்கள் வேலையைக் கவனித்திருக்கிறார்.

அவர் செய்த உதவிக்கெல்லாம் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம் என்று ரமணியும் அவன் தாயாரும் அடிக்கடி பேசிக் கொள்வார்கள்.

சில மாதங்கள் கழித்து ரமணியும் அவன் அம்மாவும் ரமணியின் கல்லூரி இருந்த இடத்துக்கு அருகிலேயே வீடு பார்த்துக்கொண்டு போய் விட்டார்கள். அவ்வப்போது ராமனுக்கு போன் செய்து நலம் விசாரிப்பான் ரமணி. காலப்போக்கில் அதுவும் குறைந்து விட்டது.

இந்த எட்டு வருடங்களில்ரமணி படித்து முடித்து, நல்ல வேலையில் சேர்ந்து காரும் வாங்கி விட்டான். தற்செயலாக இந்தச் சந்திப்பு அன்று நிகழ்ந்தது.

காரில் போகும்போது இருவரும் பழைய நாட்களைப் பற்றியும், இருவரது குடும்ப நடப்புகளைப் பற்றியும் பேசிக்கொண்டே வந்தனர்.

கார் ஆவடியை நெருங்கிக் கொண்டிருந்தபோது, ரமணியின் கைபேசி அடித்தது. எடுத் துப் பேசினான்.

"ஆமாம் சேர். பதினொரு மணிக்கு வருவதாகச் சொன்னேன். வேறு ஒரு முக்கியமான வேலை வந்திடுச்சு. ரெண்டு மணிக்குள்ள வந்திடுறேன். சொறி சேர்..." என்றான்.

ராமன் அவனைத் திரும்பிப் பார்த்தார். "வேறெங்கேயோ போக வேண்டியவன் எனக்காக இந்தப் பக்கம் வந்திருக்கியா?" என்றார்.

ரமணி பதில் சொல்லாமல் இருந்தான்.

"நீ எங்க போகணும்?"

"மவுண்ட் ரோட்."

"மவுண்ட் ரோடா? ஆவடிப் பக்கம் போறேன்னு சொன்னியே? எதிர்ப் பக்கமாச்சே இது? எனக்காகவா?"

"ஆமாம் சேர்!"

"என்னப்பா இது? முப்பது நாற்பது கிலோ மீற்றர் தூரம். மூணு மணி நேரம் டைம் வேஸ்ட் உன்னோட வேலையைக் கெடுத்துக்கிட்டு, எதுக்கு இதெல்லாம்?"

"சேர்! நீங்க என் குடும்பத்துக்கு செஞ்ச உதவிக்கு பதில் உதவி செய்யிறதுங்கிறது நடக்காத காரியம். ஆனா இன்னிக்கு உங்களுக்கு ஒரு சின்ன உதவி செய்ய எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைச்சது. அதை எப்படி சேர் நான் நழுவ விட முடியும்?"

ராமன் அவன். கையைப் பிடித்து மெதுவாக அழுத்தினார்.

குறள் 105

உதவி வரைத்தன்று உதவி உதவி

செயப்பட்டார் சால்பின் வரைத்து.

பொருள்:

ஒரு உதவிக்குச் செய்யப்படும் பதில் உதவி அந்த உதவியின் அளவுக்கு இருக்க வேண்டும் என்பதில்லை, உதவி பெற்றவரின் (பதில் உதவி செய்பவரின்) பண்பின் அளவுக்கு அது இருக்கும்.

(குறிப்பு: "ஒருவர் செய்த உதவி சிறியதாக இருந்தாலும், உதவி பெற்றவரின் பண்பைப் பொறுத்து அவர் செய்யும் பதில் உதவி பெரிதாக அமையலாம் என்றும் இந்தக் குறளுக்குப் பொருள் கொள்ளலாம்).

## பழமொழிகள்

- கணக்கறிந்த பிள்ளையிருந்தால் வீட்டில் வழக்குக்குக் குறைவில்லை.
- கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
- கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?
- கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்.
- கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பது போல.
- கழுதை அறியுமா கற்பூர வாசனை?
- காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
- காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல்.
- காகம் திட்டி மாடு சாகாது.
- காய்த்த மரம்தான் கல்லடிபடும்.
- காவோலை விழக் குருத்தோலை சிரிப்பது போல்.
- காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
- கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்?
- குடிகாரன் பேச்சு விடிஞ்சாலே போச்சு.

## விடுகதைகளும் விடைகளும்

- நீண்ட உடலிருக்கும் தூணும் அல்ல, உடலில் சட்டை இருக்கும் ஆனால் உயிர் இல்லை,துயிலில் சுகம் இருக்கும் மெத்தை அல்ல அது என்ன?

  **தலையணை**

- எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு அது என்ன?

  **நண்டு**

- ஓய்வு எடுக்காமல் இயங்கும். ஓய்வு எடுத்துவிட்டால் மறுபடியும் இயங்காது. அது என்ன?

  **இதயம்**

- நான் இருந்ததில்லை.ஆனாலும் இருப்பவனாக இருப்பேன். என்னை யாரும் பார்த்ததில்லை. பார்க்கும் முன் பழசாயிருப்பேன். என்னை நம்பியே இந்த உலகமும் மக்களும் நல்லது நடக்குமென எண்ணுகிறார்கள் நான் யார்?

  **நாளை**

- கிட்ட இருக்கும் பட்டணம் எட்டித்தான் பார்க்க முடியவிலை. அது என்ன?

  **முதுகு**

- கோவிலைச் சுற்றிக் கறுப்பு கோவிலுக்குள்ளே வெளுப்பு. அது என்ன?

  **சோற்றுப்பானை-சோறு**

- வெள்ளை ஆளுக்கு கறுப்புத் தலைப்பாகை. அது என்ன?

  **தீக்குச்சி**

- அழுவேன், சிரிப்பேன் அனைத்தும் செய்வேன் நான் யார்?

  **முகம் பார்க்கும் கண்ணாடி**

நாம் முன்னேற நட்பு ஒரு படிக்கட்டாக அமையட்டும்.

- ஆப்பிரிக்க பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்கள் இயக்கமாக மலர்ந்த தமிழ் மக்கள் பேரவை

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டு இன்று நான்கு வருடங்கள் நிறைவடைகின்றன.

19ஆம் திகதி டிசம்பர் மாதம் 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை இன்று தனது நான்காவது வருடத்தை நிறைவு செய்துள்ளது.

தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்ட போது அதுபற்றி எழுந்த விமர்சனங்கள் ஏராளம்.

எனினும் தமிழ் மக்கள் அந்த அமைப்பை அரவணைத்தனர். ஆதரித்தனர். அதனால் தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் இயக்கத்தின் பால் உலகுவாழ் தமிழ் மக்கள் தமது பார்வையைச் செலுத்தினர்.

தமிழ் அரசியல் தரப்புகளின் போக்குகளில் ஏற்பட்ட அதிருப்திகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு வலுவான மக்கள் அமைப்புத் தேவை என்ற அடிப்படையிலும் தமிழ் மக்கள் பேரவைக்கான மக்களின் ஆதரவு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உச்சமடைய,

தமிழ் மக்கள் பேரவை நடுநிலை நின்று அகிம்சை வழியில் இயங்கலாயிற்று.

விடுதலைப் போராட்டத்தின் முடிவுக்குப் பின்பான தமிழ் மக்களின் வாழ்வு என்பது பலத்த சவால்களைக் கொண்டுள்ளது.

தமிழ் அரசியல் தரப்புகளின் நிலைப்பாடு தமிழ் மக்களுக்கு ஏற்றதாக அமையவில்லை. இத்தகையதோர் சூழ்நிலையில் தமிழ் அரசியல் கட்சிகள் என்ற எல்லை கடந்து, தமிழ் மக்களின் உரிமைக்காகவும் தமிழர் தாயகத்தில் நடக்கின்ற ஆக்கிரமிப்புகளைத் தடுக்கவும் ஒரு மக்கள் இயக்கம் தேவை என்று உணரப்பட்டவேளையில், தமிழ் மக்கள் பேரவை மலர்ந்ததன் காரணமாக அதன் மீதான அபிமானம் வலுப்பெற்றது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதுதவிர, வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவராகப் பதவி வகித்தமை பேரவை மீதான தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு மேலும் வலுச்சேர்த்தது.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தபோதிலும் தமிழ் மக்களின் உரிமை பற்றிய உறுதிப்பாட்டை ஆணித்தரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழ் அரசியல் கட்சிகள் என்ற எல்லை கடந்து ஒரு மக்கள் இயக்கம் எழுகை பெறுவது அவசியம் என்ற அடிப்படையிலும்,

அவ்வாறான மக்கள் இயக்கத்தின் மூலமாகவே எந்த சக்திகளுக்கும் விலைபோகாத உறுதியான கொள்கையுடன் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியும் என்ற சிந்தனையின் அடிப்படையிலும் தமிழ் மக்கள் பேரவையின் அவசியத்தை நீதியரசர் விக்னேஸ்வரன் அங்கீகரித்துக் கொண்டார்.

இதற்கு மேலாக, தமிழ் மக்களின் உரிமை என்ற விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து கொண்டதால் பேரவையின் கடந்த காலப் பணிகள் ஜனநாயக வழிப் போராட்ட சிந்தனைக்கு உயிர்ப்புக் கொடுத்தன.

இந்த வகையில் யார் எதைக்கூறினாலும் எங்ஙனம் விமர்சித்தாலும் தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களின் இயக்கமாகத் தனது பணியை முன்னெடுத்துச் செல்கிறது.

கடந்த நான்கு ஆண்டு காலப் பயணத்தில் பேரவை நடந்த தூரம் உன்னதமானது என்பதை எவரும் நிராகரிக்க மாட்டார்கள்.

## சர்வதேசம் எம்மை ஏமாற்ற முடியாது

# எமது ஒற்றுமையை பலப்படுத்தி இலக்கை அடைவோம் — செல்வம் எம்.பி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அரசாங்கத்திடம் ஒரு நியாயத்தை கேட்கின்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கின்றோம்.சர்வதேசம் எம்மை ஏமாற்ற முடியாது. சர்வதேசத்துடன் சேர்ந்து போகின்ற நிலைக்கு வந்துள்ளோம். எமது ஒற்றுமையை பலப்படுத்தி எமது இலக்கை அடைவோம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 70ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் அதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இனிவரும் காலங்களில் ஏற்படும் சவாலை எப்படி சமாளிப்பது என்பது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்.

யுத்தத்தின் பிற்பாடு கடந்த பத்து வருட காலமாக தமிழ் மக்களின் உரிமைக்காக அவர்களுடைய அபிலாசைகளை தமது அபிலாசைகளாக ஏற்று அரசியல் நீரோட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறப்பாகச் செயற்படுகின்றது.கடந்த ஐந்தாண்டுகளில் அரசிற்கு ஆதரவளித்து வெளியே நின்று எமது மக்களின் உரிமைக்காக அரசிற்கு பலத்த அழுத்தங்களை பிரயோகித்தோம்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலர் விமர்சனம் செய்கின்றனர். இவ்வாறு விமர்சனம் செய்பவர்கள் சிங்கள கட்சிகள் என்றாலும்பரவாயில்லை.அவ்வாறு விமர்சனம் செய்பவர்கள் தமிழ்க் கட்சிகளைச் சார்ந்தவர்களாகவே இருக்கின்றனர். இனிவரும் அரசாங்கத்தை எம்மால் தான் தீர்மானிக்க முடியும். அரசிடம் தமிழர்களின் உரிமையைத் தட்டிக்கேட்கின்ற திறன் கூட்டமைப்பிற்கே உண்டு. எதிர்காலங்களில் வாக்குகள் உடைக்கப்படும் போது எமது உரிமை எமது பூர்வீக வாழ்விடங்கள் பறிபோகின்ற நிலை உருவாகும். எமது உரிமை பூர்வீகம் பற்றி சிந்திக்காவிட்டால் சிங்களம் வடக்கு கிழக்கில் காலூன்றும் நிலை தோன்றும். அதன் பிற்பாடு எதைப்பேசியும்பலனில்லை.

காய்க்கின்ற மரங்களுக்கே கல்லெறி விழும். நன்மை செய்கின்ற எமக்கு பலரும் பல்வேறுபட்ட விமர்சனங்களையும் செய்வார்கள்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை செயலிழக்க செய்யும் செயற்பாடுகள் தற்போது மிகத் தீவிரமாக இடம் பெற்று வருகின்றன. எழுபது ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி சிறப்பாக பயணம் செய்கின்றது.

தமிழரசுக் கட்சியினுடைய வரலாறு என்பது அர்ப்பணிப்பு மிக்க தலைவர்கள், உறுப்பினர்கள், மக்களின் அயராத உழைப்பினால் தொடர்ந்து சிறந்து விளங்குகின்றது.எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நாம் ஒன்றுபட்டு கடுமையாக உழைத்தால் 20 ஆசனங்களை பெற முடியும்.

எங்களுடைய மக்களுக்கு காணிப் பிரச்சினைகள், காணாமல் போனோருடைய பிரச்சினைகள், அரசியல் கைதிகளுடைய பிரச்சினைகள் என பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. விட்டுக் கொடுப்புகளை செய்து வந்துள்ளோம்.

எமது மக்களுடைய விடுதலையை உரிமைகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் நாங்கள் சர்வதேசத்திற்கு ஒரு செய்தியை எமது நியாயப்பாட்டை சொல்லியிருக்கின்றோம்.சிலர் நாம் அரசாங்கத்திற்கு சோடை போய் விட்டதாகச் சொல்கின்றார்கள்.

அவ்வாறான விமர்சனங்களை செய்பவர்களுக்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புகின்றேன்.நாம் அரசாங்கத்திற்கு அடிபணியவில்லை மாறாக சர்வதேசம் அரசாங்கத்திடம் ஒரு நியாயத்தை கேட்கின்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கின்றோம். சர்வதேசம் எம்மை ஏமாற்ற முடியாது. அரசாங்கத்துடன் சேர்வது நோக்கமல்ல அதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.எனவே அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு எதிர்வரும் தேர்தலிலும் வெற்றி பெறுவதற்கு தீவிரமாக உழைக்க வேண்டும் என்றார். (ம-3)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10. மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. (இ-5)

## ஈழத்தமிழர்களை ஏமாற்ற ஸ்டாலின் கபட நாடகம்

அமைச்சர் ஜெயக்குமார் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழர்களை ஏமாற்ற ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க கபட நாடகம் நடத்துவதாக அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நடைபெறும் ஜி.எஸ்.டி பேரவை கூட்டத்தில் பங்கேற்பதற்காக சென்னையில் விமான நிலையத்திற்கு அமைச்சர் ஜெயக்குமார் நேற்று வருகை தந்தார்.

அப்போது மோடி அரசு நடைமுறைப்படுத்தியுள்ள புதிய குடியுரிமை சட்ட திருத்தத்தின் ஊடாக இலங்கை தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து தி.மு.க முன்னெடுத்து வரும் தொடர் போராட்டங்கள் குறித்து வினவப்பட்டது.

இலங்கைத் தமிழர்களை ஏமாற்ற தி.மு.க பல்வேறு நாடகங்களை அவ்வப் போது அரங்கேற்றி வருவதாகவும் அதேபோல்தான் தற்போதும் புதிய நாடகம் ஒன்றை அவர்கள் அரற்கேற்றுவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-3)

## இரு வெவ்வேறு இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு

மூவர் கைது; வாகனம் பறிமுதல்

(தருமபுரம்)

சட்ட விரோத மணல் அகழ்வுக்கு எதிராக வடமாகாண பொலிஸ்மா அதிபர் ரவி விஜயகுணவர்த்தனவின் பணிப்புரைக்கமைய நேற்றைய தினம் புதன் கிழமை கல்லாறு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டதன் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களின் உழவு இயந்திரமொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் சுண்டிக்குளம் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்டதன் சந்தேகத்தின் பேரில் ரக்டர் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரின் ரக்டர் வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவருடன் மணலை ஏற்றியவர்கள் பொலிஸாரைக் கண்டவுடன் தப்பியோடியுள்ளனர். தப்பியோடியுள்ளவர்கள் தொடர்பான மேலதிக விசாரணையை தருமபுரம் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஜே. ருவான் தலைமையிலான அணியினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,316)

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள் வெளியீடு

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட மாதம் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை இறுதி செய்யும் பணி நிறைவடைந்த நிலையில் டிசெம்பர் 25ஆம் திகதி நத்தார் பண்டிகையின் பின்னர் வெளியாகும்என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ம-3)

## சத்திய தரிசனம்

### செய்யும் தொழிலே தெய்வம்



❖ எல்லா வேதங்களையும் கற்றுத் தேர்ந்தவராக இருந்தாலும், மனத்தூய்மை இல்லாவிட்டால் அதனால் பயன் இல்லை.

❖ ஆரோக்கியமும், மன வலிமையும் பெற்றவர்கள் ஏழை எளியவர்களுக்கு சேவை செய்ய முற்பட வேண்டும்.

❖ நீதிபோதனைகளை மற்றவர்க்கு எடுத்துச் சொல்வது எளிது. ஆனால், கடைப்பிடிப்பது கடினம்.

❖ தேடும் செல்வம் நம்மோடு வரப் போவதில்லை. அதனால், நம்முடைய பணம், பொருள், அதிகாரம், பெருமை அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணிப்போம்.

❖ செய்யும் தொழிலே தெய்வம். எந்தப் பணியும் உத்தமமானது தான்.. அதில் விருப்பத்தோடு ஈடுபடும்போது அதன் மதிப்பு கூடுகிறது.

❖ மனித வாழ்வை மரத்திற்கு ஒப்பிட்டால், நல்ல பண்பாட்டை வளர்க்கும் கல்வி அதன் வேராக அமைந்துள்ளது.

❖ அன்பு வழியில் கடவுளின் திருவடியில் பக்தி செலுத்துங்கள். குழப்பம் நீங்கி நிம்மதி பெறுவீர்கள்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

இயற்கையின் குணங்களே செயல்களுக்கு காரணமாக இருக்கின்றன. அதன்படியே சகல கர்மங்களும் செய்யப்படுகின்றன. ஆணவத்தால் அறிவிழந்தவன் நானே. இதை செய்கிறேன் என்று நினைக்கிறான். - பகவத்கீதை

# Bio BIOLOGY Rank List 2020

## N.T.GAJENTHIRAN

| No | Name | School Name | Marks |
|---|---|---|---|
| 01. | Sundareswary Tharmaputhiran | J/Kokuvil Hindu College | 92 |
| 02. | Sujajini Ravichandran (EM) | J/Vembadi Girl's High School | 90 |
| 03. | Vinayagamoorthy Thivakaran | J/St.John's College | 90 |
| 04. | Myvily Nagendran | J/Kokuvil Hindu College | 88 |
| 05. | Aravinthi Yogarasa | J/Kokuvil Hindu College | 88 |
| 06. | Thevarajan Jathurshan | J/Hindu College | 84 |
| 07. | Shambavi Baskaran (EM) | J/Vembadi Girl's High School | 84 |
| 08. | Avanika Varatharasa | J/Vembadi Girl's High School | 84 |
| 09. | Uthayakumar Bavalakshan | J/Chavakachcheri Hindu College | 84 |
| 10. | Thiviyani Jeyanthan (EM) | J/Vembadi Girl's High School | 82 |
| 11. | Senthamilselvi Serthinathan | J/Kokuvil Hindu College | 82 |
| 12. | Thamotharakumar Givashanth | J/Hindu College | 80 |
| 13. | Anubama Sivashanmugarajah (EM) | J/Vembadi Girl's High School | 78 |
| 14. | Kalaimathy Premanathan | J/Manipay Ladies College | 78 |
| 15. | Thamilpriya Arivarasan | J/Vembadi Girl's High School | 78 |
| 16. | Vithusha Muralietharan | J/Vembadi Girl's High School | 76 |
| 17. | Amuthavily Mahenderajah (EM) | J/Chundikuli Girl's College | 76 |
| 18. | Tharuka Parameswaran | J/Vembadi Girl's High School | 74 |
| 19. | Miruthy Sureshkumar (EM) | J/Vembadi Girl's High School | 74 |
| 20. | Mathumai Srikaran (EM) | J/Vembadi Girl's High School | 74 |
| 21 | Papitha Uthajakumar | J/Vembadi Girl's High School | 74 |
| 22. | Indrajith Sangeerthanan | J/Kokuvil Hindu College | 74 |
| 23. | Jathursiny Tharmasena | J/Vembadi Girl's High School | 72 |
| 24. | Layansika Jegatheeswaran | J/Manipay Ladies College | 72 |
| 25. | Wijayanthy Wijayakumar (EM) | J/Vembadi Girl's High School | 72 |
| 26. | Vasanthakumar Javagar | J/Hindu College | 72 |
| 27. | Arthigaa Veeraragavan | J/Vembadi Girl's High School | 72 |
| 28. | Manogaran Panuga (EM) | J/Vembadi Girl's High School | 70 |
| 29. | Piraveena Thavendren | J/Vembadi Girl's High School | 70 |
| 30. | Murralitharan Piragayan | J/Hindu College | 70 |
| 31. | Kugathasan Umakajan | J/Hindu College | 68 |
| 32. | Thushiha Jeyarajasingam | J/Vembadi Girl's High School | 68 |
| 33. | Thadshayini Ragunathan | J/Vembadi Girl's High School | 68 |
| 34. | Kugathasan Jathurshan (EM) | J/St.John's College | 68 |
| 35. | Mathusaaliny Puvanenthiran | Mu/Puthukkudiyiruppu Central College | 68 |
| 36. | Suresh Birunthavan | J/Hindu College | 68 |
| 37. | Thangarasa Suvanja | J/Atchuvely Central College | 68 |
| 38. | Sivakonesan Mannamirthan (EM) | J/Hindu College | 68 |
| 39. | Jeyachandran Mathavan (EM) | J/Hindu College | 66 |
| 40. | Jebaranjan Thushiyanthan | J/St.John's College | 66 |
| 41. | Sivanathan Sujeethan | J/Kokuvil Hindu College | 66 |
| 42. | Habilini Paramthilairajan | J/Vembadi Girl's High School | 64 |
| 43. | Paktharasa Pavatharakan (EM) | J/Hindu College | 64 |
| 44. | Vyshnavi Paramanantham | J/Vembadi Girl's High School | 64 |
| 45. | Newra Nadesan (EM) | J/Chundikuli Girl's College | 64 |
| 46. | Shalini Berty Bannister | J/Vembadi Girl's High School | 64 |
| 47. | Jerad Antonipillai Sageenan | J/St.Patrick's College | 62 |
| 48. | Thavarasa Sinthushan | J/Mahajana College | 62 |
| 49. | Anista Kailasapathy | J/Hindu Ladies College | 62 |
| 50. | Vithusana Aingkaraverl | J/Kokuvil Hindu College | 62 |
| 51. | Sivatharshiny Pushparaj | J/Hindu Ladies College | 62 |
| 52. | Sanjika Sundaralingam | J/Hindu Ladies College | 60 |
| 53. | Kajani Cukaparan (EM) | J/Vembadi Girl's High School | 60 |
| 54. | Yogarasa Gowryshanker | J/Hindu College | 60 |
| 55. | Premachandran Abishek | J/St.Patrick's College | 60 |
| 56. | Shanthakumar Dinushanthan | J/Hindu College | 60 |
| 57. | Mathiyalakan Harikaran | J/Hindu College | 60 |
| 58. | Nirojini Sivathasan | J/Vembadi Girl's High School | 60 |
| 59. | Dinoya Suresh | J/Kokuvil Hindu College | 58 |
| 60. | Kajani Gurusamy | J/Vembadi Girl's High School | 58 |
| 61. | Kawshika Mahendran | J/Hindu Ladies College | 58 |
| 62. | Sathursana Kethieswaran | J/Manipay Ladies College | 58 |
| 63. | Thuraisamy Shivasankar | J/Hindu College | 58 |
| 64. | Shanhavi Kamaleswaran | J/Vembadi Girl's High School | 58 |
| 65. | Sugantha Kamalanathan | J/Hindu Ladies College | 58 |
| 66. | Mary Evengel Anton Premathas | J/Vembadi Girl's High School | 58 |
| 67. | Abinaya Balachandran | J/Hindu Ladies College | 56 |
| 68. | Pavithira Arunasalam | J/Vembadi Girl's High School | 56 |
| 69. | Tharaga Vijendran | J/Kokuvil Hindu College | 56 |
| 70. | Bashna Vijayakumar | J/Hindu Ladies College | 56 |
| 71. | Thabitha Ireen Jeyakumaran (EM) | J/Chundikuli Girl's College | 56 |
| 72. | Theveswary Gunarathnam | J/Vembadi Girl's High School | 56 |
| 73. | Kamshayini Thayananthan | J/Kokuvil Hindu College | 56 |
| 74. | Lavanisha Balakanthan | J/Hindu Ladies College | 56 |
| 75. | Shanmugananthan Arbinda (EM) | J/Hindu College | 54 |
| 76. | Mithushana Jeyakumar | J/Vembadi Girl's High School | 54 |
| 77. | Piranavi Kapilan | J/Hindu Ladies College | 54 |
| 78. | Eswaran Showmiya | J/Manipay Ladies College | 54 |
| 79. | Danushikka Jegatheeswaran | J/Kokuvil Hindu College | 54 |
| 80. | Kalainila Ilangkumaran | J/Vembadi Girl's High School | 54 |
| 81. | Kajalukshy Kirubananthan | J/Vembadi Girl's High School | 52 |
| 82. | Kirushigha Sureshkumar | J/Vembadi Girl's High School | 52 |
| 83. | Sriskanthakumar Thivikkshanan | J/Hindu College | 52 |
| 84. | Vatenja Selvarasa | J/Vembadi Girl's High School | 52 |
| 85. | R. Jasmini | J/Manipay Ladies College | 52 |
| 86. | Suthanika Thillainathan | J/Hindu Ladies College | 52 |
| 87. | Sathuriya Chandrakumaran | J/Chundikuli Girl's College | 52 |
| 88. | Balasingam Thulasika | J/Vembadi Girl's High School | 52 |
| 89. | Faith Naomi Parathan | J/Vembadi Girl's High School | 52 |
| 90. | Valantena Jeyachandran (EM) | J/Vembadi Girl's High School | 52 |
| 91. | Niroshana Sivananthan | J/Hindu Ladies College | 52 |
| 92. | Sangavitha Chandramowleeswaran (EM) | J/Vembadi Girl's High School | 52 |
| 93. | R.Yathusha (EM) | J/Vembadi Girl's High School | 52 |
| 94. | Kirubakaran Janarthan | J/Kokuvil Hindu College | 52 |
| 95. | Kishajini Paramsothy | J/Vembadi Girl's High School | 52 |
| 96. | Vijansika Nanthakumar | J/Vembadi Girl's High School | 50 |
| 97. | Lukshana Vickneswaran | J/Hindu Ladies College | 50 |
| 98. | Vimalenthiranathan Venuharan (EM) | J/Hindu College | 50 |
| 99. | Lishani Vikneswaran (EM) | J/Vembadi Girl's High School | 50 |
| 100. | Sutheskumar Hamshajini | J/Kokuvil Hindu College | 50 |
| 101. | Sijani Kokilarajah | J/Hindu Ladies College | 50 |
| 102. | Dilakshana Senthilkumaran | J/Kokuvil Hindu College | 50 |
| 103. | Varunja Tharmaselan | J/Vembadi Girl's High School | 50 |
| 104. | Jeevaraja Janani | | 50 |
| 105. | Shankavi Sayanthan | J/Hindu Ladies College | 50 |
| 106. | Chandiran Sathursigan | Kn/Muruganananda College | 50 |
| 107. | Priyatharsiny Vijayabalasingam | J/Kokuvil Hindu College | 48 |
| 108. | Printhini Selvaranjen | J/Manipay Ladies College | 48 |
| 109. | N M Naflan | Mu/Vidyananda College | 48 |
| 110. | Impulan Shathushana | J/Kokuvil Hindu College | 48 |
| 111. | Anusha Ravindran | J/Vembadi Girl's High School | 48 |
| 112. | Jeyekkumar Akilan | J/Hindu College | 48 |
| 113. | Vaishnaa Babakaran | J/Vembadi Girl's High School | 48 |
| 114. | Kemissha Thaventhiran | J/Holy Family Convent | 48 |
| 115. | T.Sivavarunan (EM) | J/Hindu College | 48 |
| 116. | Rakshiny Nagaradnam | J/Hindu Ladies College | 46 |
| 117. | Sangeetha.S | J/Kokuvil Hindu College | 46 |
| 118. | Ashariha Ashokan (EM) | J/Vembadi Girl's High School | 46 |
| 119. | Rajendran Abishan (EM) | J/Hindu College | 46 |
| 120. | Suvethika Thillainathan | J/Hindu Ladies College | 46 |
| 121. | Thenuja Premakanthan | J/Hindu Ladies College | 46 |
| 122. | Aranee Thiyagarajah | J/Kokuvil Hindu College | 46 |
| 123. | Dilakshana Kunabalasingam | J/Kokuvil Hindu College | 46 |
| 124. | Shritharan Pranavan (EM) | J/Hindu College | 46 |
| 125. | Bairavee Kanthanesan | J/Vembadi Girl's High School | 46 |
| 126. | Mathurshana Mokanathas (EM) | J/Kokuvil Hindu College | 46 |
| 127. | Mriathasan Vithushan | J/Union College | 46 |
| 128. | Abinaya Elagumeeharan | J/Vembadi Girl's High School | 46 |
| 129. | Thenusha Thayalan | J/Vembadi Girl's High School | 46 |
| 130. | Kiruththiga Balakrishnan | J/Atchuvely Central College | 46 |
| 131. | Mithuna Jeevarathnam | J/Vembadi Girl's High School | 46 |
| 132. | Thavarasa Shayanthana (EM) | J/Vembadi Girl's High School | 46 |
| 133. | Kanagarathnam Jenarubi | J/Manipay Ladies College | 45 |
| 134. | R Laksigan | Mu/Vidyananda College | 44 |
| 135. | Karththikagine Kunasegaram | J/Vembadi Girl's High School | 44 |
| 136. | Albertjeeva Marin Rojes (EM) | J/Hindu Ladies College | 44 |
| 137. | Rithuskar Arumaithurai | J/Hindu College | 44 |
| 138. | Tharminy Ravithasan | J/Hindu Ladies College | 44 |
| 139. | Channuthaange Jeyakaran (EM) | J/Vembadi Girl's High School | 44 |
| 140. | Pirabaharan Gabilesh (EM) | J/Hindu College | 44 |
| 141. | Viviyaan Jeyanthan | J/Vembadi Girl's High School | 44 |
| 142. | Tharshiga Mahendran | J/Vembadi Girl's High School | 42 |
| 143. | Mohanarajan Thiviyaharan (EM) | J/Hindu College | 42 |
| 144. | M I Ahamed | Palamunai Muslim M V | 42 |
| 145. | Suntharalingam Paranitharan (EM) | J/Hindu College | 42 |
| 146. | Ramini Thineshkumar | J/Chundikuli Girl's College | 42 |
| 147. | Panuvanthy Sivakanthan | J/Hindu Ladies College | 42 |
| 148. | Ragu Thenuya | J/Vayavilan Central College | 42 |
| 149. | Ranjan Invenstan | J/St.Patrick's College | 42 |
| 150. | Ampikarasa Lakulan | J/Hindu College | 42 |
| 151. | Sivanathan Sharmitha | J/Hindu Ladies College | 41 |
| 152. | Ratnangi Tharmabala | J/Kokuvil Hindu College | 41 |
| 153. | Janoch S | J/St.John's College | 40 |
| 154. | Janusiya Muralithas | J/Kokuvil Hindu College | 40 |
| 155. | Shaambavi Umasegar | J/Hindu Ladies College | 40 |
| 156. | Chiyamin Thushana Ranjithanayagam | J/Vembadi Girl's High School | 40 |
| 157. | Mithusiya Selvakumar | J/Puttur Srisomaskanda College | 40 |
| 158. | Nimshiya Yasotharuban | J/Chundikuli Girl's College | 40 |
| 159. | Vaishnavi Lingeswaran | J/Vembadi Girl's High School | 40 |
| 160. | S Keerthigan | J/Hindu College | 40 |
| 161. | Bavathaarini Sangarapillaie (EM) | J/Chundikuli Girl's College | 40 |
| 162. | Sharanyah Makeshwaran | J/Hindu Ladies College | 40 |
| 163. | Thanusuja Nagarasa | J/Hindu Ladies College | 40 |

NEW SCIENCE WORLD
NEW SCIENCE WORLD (C-8558)
VICTORY MUST
Brown Road, Jaffna.

## கமால் குணரத்...

றுள்ளது.

இந்தச் சந்திப்பு இயல்பான சூழலில் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இலங்கையின் புதிய அரசாங்கத்தினால் பாதுகாப்புச் செயலராக மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன நியமிக்கப்பட்ட பின்னர், அமெரிக்க உயர்மட்டப் பிரதிநிதி ஒருவர் அவரைச் சந்தித்திருப்பது இதுவே முதல்முறையாகும்.

எனினும் இந்தச் சந்திப்புத் தொடர்பாக அமெரிக்க தூதரகம் இதுவரை எந்த தகவலையும் வெளியிடவில்லை. (ம-3)

## 50 கிலோவுக்கும்...

அடங்கிய கேரள கஞ்சாவை கடற்படை கைப்பற்றியிருந்தது. இதனையடுத்து வல்வெட்டித்துறை கடற்பகுதியில் மிதந்து சென்ற ஐந்து பார்சல்கள் அடங்கிய கேரள கஞ்சாவை கடற்படை கைப்பற்றியது.

இவை ஒவ்வொன்றும் 15 சிறிய பொதிகளில் சுற்றப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்தது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா மேலதிக விசாரணைகளுக்காக அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-3,10)

## பிரதேச மக்கள் ஒன்றிணைந்து...

யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மறவன்புலவு பகுதியில் பொது மக்கள்குடியிருப்புகளுக்கு அருகாமையில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

கொடிகாமம் பஸ் நிலையத்திலிருந்து ஏ9 வீதி வழியாக பேரணியாகச் சென்று சாவகச்சேரி பிரதேச சபைக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று புதன்கிழமை ஈடுபட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் சந்தித்துக் கலந்துரையாடினார். காற்றாலை அமைக்கும் திட்டத்தை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (ம-3)


அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 825
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.12.18
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 74,897,795/-
வெற்றி இலக்கங்கள் 01 16 46 57
ஆங்கில எழுத்து C
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3276 திகதி: 2019.12.18
ஊதா புதன்கிழமை
விசேட இலக்கம் 3016
வெற்றி இலக்கங்கள் 10 43 51 63
ஆங்கில எழுத்து M
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 33,054,300/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 18/12/2019 வெற்றி வாரம் 2711 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் மகரம் 33 35 46 54
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,814,666
2019/12/19 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுகளாகும்
வெற்றி பெற்ற சீட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 306
சீட்டிழுப்பு திகதி 18.12.2019 நீலம்
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 14 40 42
விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 48,566,280
2019.12.20 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk


## ட்ரம்பை பதவி...

நடைபெறவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஜோ பிடனுக்கு எதிராக உக்ரைனில் சதி திட்டம் தீட்டினார் என்றும் அவருக்கு எதிராகச் சதிசெய்ய உக்ரைன் ஜனாதிபதியிடம் பேரம் பேசினார் என்றும் டொனால்ட் ட்ரம்ப் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சதித் திட்டத்தின் மூலம் அரசியலமைப்புச் சட்டம், தேசிய பாதுகாப்பு, ஜனாதிபதித் தேர்தலுக்கான நம்பகத்தன்மை ஆகியவற்றுக்கு ட்ரம்ப் முரணாக நடந்துகொண்டார் என்று எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

டொனால்ட் ட்ரம்ப்புக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றப்பிரேரணை பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபை இரண்டிலும் வெற்றி பெற்றால் அவர் பதவியை இழக்க நேரிடும்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதிக்கு எதிராக பதவிநீக்கக் குற்றப்பிரேரணை கொண்டு வருவது, நாட்டின் மீதான அவமதிப்பு என்று தெரிவித்துள்ளார்.

மேலும் சபாநாயகர் நான்சி பெலோசிக்கு டொனால்ட் ட்ரம்ப் எழுதியுள்ள கடிதத்தில் நான் எந்தத் தவறும் செய்ய வில்லை. இன்று தீவிர இடதுசாரி களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளேன். ஆனால் உண்மையான ஜன நாயக வாதிகள் அவ்வாறு செய்ய மாட்டார்கள். ஒரு ஜனாதிபதிக்கு எதிராக ஒருபோதும் இவ்வாறு நடக்கக்கூடாது. பிரார்த்தனை செய்யுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சிக்கு 233 உறுப்பினர்கள் உள்ளனர். எனவே பிரதிநிதிகள் சபையில் குற்றப்பிரேரணை நிறைவேறும். ஆயினும் செனட் சபையில் ட்ரம்பின் குடியரசு கட்சிக்கு 53 உறுப்பினர்கள் உள்ளதால் பதவிநீக்கக் குற்றப்பிரேரணை தோல்வியடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-3)

## ஜனாதிபதியிடம்...

இடைக்கால அறிக்கை கையளிக்கப்படவுள்ளது.

அத்துடன்ரகசிய சாட்சிகள் குறித்த ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ம-3)

## படுகாயமடை...

உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பருத்தித்துறைக்குப் புறப்பட்ட பேருந்து வளாகத்துக்குள் இருக்கும் அலுவலகத்துக்கு முன்பாகப் பயணித்த போது முதியவர் மீது மோதியது.

சம்பவத்தையடுத்து முதியவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றிருந்தது.

இவரின் மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர்மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## இந்திய, சீன தூது...

தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் நேற்று மற்றுமொரு சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது இரு நாடுகளுக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ம-3)

## சம்பிக்க ரண...

விப்பத்து தொடர்பாகவே சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டதாக சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி நிசாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக, பாட்டலி சம்பிக்க ரணவக்கவை கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு சட்டமா அதிபரினால் கொழும்பு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட ஆலோசனையின்படி இந்த நடவடிக்கை இடம்பெற்றதாக அவர் குறிப்பிட்டார்.

கவனயீனத்துடன் வாகனத்தைச் செலுத்தி நபரொரு வரை படுகாயமடையச் செய்தமை மற்றும் வீதி விபத்தின்போது வேறு ஒரு நபரை சாரதியாக அடையாளப் படுத்தியதாக முன்னாள் அமைச்சருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## அரசியல் தீர்வு வழங்க வேண்டும்...

இலங்கை தமிழரசுக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

எதிர்காலத்தில் சர்வதேச ரீதியாக மற்றும் உள்நாட்டில் நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும் என்றால் தமிழ் மக்கள் தமது ஆணையை முழுமையாக எங்களுக்கு வழங்க வேண்டும். மக்களின் ஆணையில் ஒரு பகுதி கூட வேறு யாருக்கும்போகக்கூடாது.

கடந்த காலங்களில் எமக்கு வழங்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட வேண்டும். அதன் பிரகாரமே நாம் செயற்பட்டுவருகின்றோம்.

தமிழீழ விடுதலை புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் நாம் நியாயமான அரசியல் தீர்வொன்றை காணுவோம் என அரசாங்கம் அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே விடுதலை புலிகளை அழிக்க இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் ஆதரவு வழங்கியது.

ஆனால் தற்போது விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்ட பின்னர் அந்த வாக்குறுதிகளில் இருந்து தப்பிச்செல்ல முயற்சிக்கின்றனர். இதற்கு சர்வதேச சமூகம் இடமளிக்க கூடாது. அத்தோடு நாம் சிங்கள மக்களையும் சிங்கள தலைவர்களையும் பகைக்க விரும்பவில்லை என்றார். (ம-3)

## நாட்டின் இறைமையையும், சட்டத்தை...

ஒன்றை வெளியிட்டிருந்தது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஸ் பத்திரண,

இலங்கை அரசாங்கம் இந்த விசாரணையில் இருந்து விலகி, சட்டத்தை அதன் பாதையில் செல்ல அனுமதித்துள்ளது.

தூதரக பணியாளர் குற்ற விசாரணைத் திணைக்களத்திடம் முரண்பாட்ட அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். எனவே விசாரணையை தொடர அனுமதிப்போம்.

அனைத்து நாடுகளும் இலங்கையை ஒரு இறையாண்மை கொண்ட நாடாக மதிக்க வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பில் உள்ள சுவிஸ் தூதுவருடன் கலந்துரையாடிய போது, தூதரக பணியாளரை கடத்திய தாகக் கூறப்படுவது அரசாங்கத்தின் விம்பத்தை கெடுப்பதற்காக இட்டுக்கட்டப்பட்ட கதை என்று விளக்கியிருந்தார்.

பொய்யான குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும் சுவிட்சர்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் எந்த வகையிலும் பாதிக்கப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## பாடசாலை அனுமதி வெட்டுப்புள்ளி...

டுப்புள்ளி வெளியிடப்பட்டுள் ளது.

**தமிழ்மொழி ஆண்கள் பாடசாலைகளின் வெட்டுப்புள்ளி.**

பருத்தித்துறை ஹாட்லிகல்லூரி - 169, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - 156, மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி - 167, மன்னார் சென்.சேவியர் ஆ.ம.ம.வி - 154,

திருகோணமலை சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரி - 154, கொழும்பு இந்துக் கல்லூரி - 154, மட்டக்களப்பு சிவானந்தா வித்தி - 153, மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி -153.

**தமிழ்மொழிமூல பெண்கள் பாடசாலைகள்**

பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர் தரப் பாடசாலை - 167, மட்டக் களப்பு வின்ஸ்சன்ட் பெண் உயர் தரப் பாடசாலை - 165, திருகோண மலை சிறிசண்முகா இந்து மகளிர் கல்லூரி - 165, யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை - 162, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி - 158,

மட்டக்களப்பு சென்.செசிலியா மகளிர் கல்லூரி - 155, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி - 153, மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி - 152, வவுனியா சிவப்பிரகாசம் மகளிர் கல்லூரி - 152,

**தமிழ்மொழிமூல கலவன் பாடசாலைகள்**

நெல்லியடி மத்திய கல்லூரி - 158, கொக்குவில் இந்துக் கல்லூரி - 156, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி - 155, சாவகச்சேரி இந்துக் கல்லூரி - 153, வவுனியா தமிழ் மகா வித்தி -152. (ம-3)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 18-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2334
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 16 25 67 77

தன நிதானய
திகதி - 2019.12.18
சீட்டிழுப்பு இலக்கம் - 240
B 03 12 63 80
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18/12/2019
சீட்டிழுப்பு இலக்கம் 1001
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 3 3 9 7 7 8

மெகா பவர்
திகதி 2019/12/18
சீட்டிழுப்பு இலக்கம் 473
F 18 27 36 68 74

சட்டவிரோத மணல் அகழ்வு

# மதகுருவை தாக்க முயன்ற பொலிஸாரால் மன்னாரில் பதற்றம்

மன்னார் தோட்டவெளி கிராமத்தில் உள்ளூர் நிர்வாக அதிகாரிகளின் அனுமதிப் பத்திரங்கள் இன்றி தென்பகுதி அரசியல்வாதிகளின் அனுமதிப் பத்திரங்களை மீன் வளர்ப்புக்கென்கையில் வைத்திருப்பதாக தெரிவித்து மணல் அகழ்வு செய்து வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதன் போது, பொலிஸ் அதிகாரிக்கும் மத குரு உட்பட பொதுமக்களுக்கும் இடையே ஏற் பட்ட முறுகல் நிலையால் அப்பகுதி சில மணி நேரம் அமைதியற்ற நிலையில் காணப் பட்டது.

மன்னார்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வருகை தந்து நிலைமையை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (ம-3,9)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(1540)

FRENCH LANGUAGE CENTRE
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan(Trained in France) DELF A1,A2,B1,B2
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 04.01.20 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் 20.01.20 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
(C-8555)

சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card)
பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.
076 443 1576
அருள்
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
(C-8397)

மாபெரும் வாகனச் சந்தை TVS சங்கானையில்
புதிய இடமாற்றத்துடன் JP Motors இன்
பண்டிகைகால சலுகைகளுடன் கூடிய விற்பனை
TVS Xchange
இடம்: TVS காட்சியறை
மல்லாகம் சந்தி சங்கானை
காலம்: இம் மாதம் 19,20,21
திகதிகளில்
புதிய TVS மோட்டர் சைக்கிள் ஒன்றை சொந்தமாக்க வேண்டுமா? இதோ உங்களது கனவை நனவாக்க.
ON THE SPOT
SALE
41870/=
உங்களின் பழைய மோட்டார் சைக்கிள் ஒன்றை கொடுத்து
புதிய TVS மோட்டார் சைக்கிள் ஒன்றை எடுத்துச்செல்லுங்கள்
இலகு தவணை லீசிங் வசதி செய்து தரப்படும்
தொடர்புகளுக்கு:-
021 2252226,0777 151101,0771 290712
TVS காட்சியறை,மல்லாகம் சந்தி சங்கானை,மானிப்பாய்
(C-8573)

# கம்பரெலிய மோசடிகளை விசாரிக்க ஆணைக்குழு

## அங்கஜன் எம்.பி தெரிவிப்பு

கடந்த ஆட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கம்பரெலிய திட்டத்தில் ஊழல்கள் நடைபெற்றுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஆட்சி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை இந்த அரசு கைவிடாது. தேசிய அபிவிருத்திகளான பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலைய அபிவிருத்தி என்பன தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

சில அபிவிருத்தி திட்டங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றினை நிவர்த்தி செய்து அந்த அபிவிருத்தியை தொடர்ந்து முன்னெடுப்போம். அதன் ஊடாக நிலையான அபிவிருத்தியை நோக்கி செல்வோம் என்றார். (ம-3)

# அரசாங்கத்தின் நன்மையான விடயங்களுக்கே ஆதரவு

## சஜித் பிரேமதாஸ உறுதி



மக்களுக்கு வாக்குறுதியளித்த நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க தேவையான நிதியை ஒதுக்கிக் கொள்வதற்கு பாராளுமன்றத்தில் பூரண ஆதரவை பெற்றுக்கொடுப்போம்.

அதற்காக அரசாங்கம் விரைவாக பாராளுமன்றத்தை கூட்டி அனுமதியை பெற்றுக் கொள்ளவேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அத்துடன் வரி குறைப்பின் மூலம் அரசாங்கத்துக்கு ஐந்நூறு மில்லியன்வரை வருமானம் இழக்கப்பட்டிருக்கின்றது என எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி செலுத்தும்வகையில் மினுவங்கொடை பிரதேசத்தில் நேற்று ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ம-3)

தேவை
கல்வி நிலையங்களுக்கு தேவையான தளபாடங்கள். (பாவித்த நல்ல நிலையில் உள்ளவை)
தொடர்புகளுக்கு:-
076 806 6960
(1539)

விற்பனைக்கு
நல்லூர் கோவில் முன் வீதியில் ¾ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. கோயிலில் இருந்து 150 M க்கு உள்ளே உள்ளது. விலை 1 கோடி 30 லட்சம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
077 046 9631
077 004 5610
(1529)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
(C-8115)

ஜேர்மன், சுவிஸ்
செல்வோருக்கான
DEUTSCH A1
வகுப்புக்கள் ஆரம்பம்
076 057 9999
No 1544, உப்புமடம் சந்தி,
KKS வீதி, கோண்டாவில்.
(C-8589)




இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.